அக்டோபர் 2008 October | இதழ் 213 ISSUE

# தமிழர் தகவல்
# TAMILS' INFORMATION




Growing with the Community
ESTD-1991

இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி
a monthly information digest

18 வது ஆண்டில் th Year

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரிடமிருந்து From the Editor

### இன்று முடியாதென்றால், எப்போது?

சிறீலங்கா அரசாங்கம் எங்கள் தாயக பூமியில் நடத்தும் அராஜகம் இன்று அதன் உச்சத்துக்குச் சென்றுள்ளது. வன்னிப் பெருநில மக்கள் சொல்லொணாத் துயரத்தினுள் தள்ளப்பட்டுள்ளனர். அகதிகளுக்கு தொண்டாற்றிய வெளிநாட்டு நிறுவனங்களும் அங்கிருந்து அரசினால் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழர் தலைமைத்துவம் துணிச்சலுடனும் நம்பிக்கையுடனும் எதிரிக்கு முகம் கொடுத்து, சவாலுடன் போரிட்டு வருகின்றது. அங்குள்ள எம் உறவுகள் துன்பங்கள் துயரங்களுக்கூடாகவும் தங்கள் தலைமையுடன் இணைந்து எழுச்சி கொண்டு பங்காற்றி வருகின்றனர்.

விடுதலைப் போரின் பெரும் சக்தியாகவும் பங்காளராகவுமிருந்து உலகம் முழுவதும் வாழும் தமிழர்கள் ஆற்றி வரும் பணி இன்றைய காலகட்டத்தில் மேலும் வீச்சுப்பெற்று வருகின்றது. இது காலத்தின் தேவையாகும்.

"தமிழரெல்லோரும் பயங்கரவாதிகள்" என்று சிங்களதேச பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோதபாய ராஜபக்ஷ சொல்கிறார். "சிறீலங்காவில் சிங்களவர் 75 வீதமானவர்கள்; இவர்களே என்றும் ஆளும் இனம்; சிறுபான்மையினரான தமிழர் எங்கள் தயவில்தான் வாழமுடியும்" என்று ராணுவத் தளபதி சரத் பொன்சேகா கர்ச்சிக்கின்றார்.

மகிந்த சிந்தனை என்றால் என்ன என்பதை இப்போதாவது பலரும் பூரணமாக அறிந்து கொள்ளலாம். இதற்கும் பிறகும் புகலிடத் தமிழர் தங்கள் கடமையை மறந்து வாழலாமா?

இவ்விடயத்தில், கனடியத் தமிழர்கள் மத்தியில் ஏற்பட்டு வரும் எழுச்சி அலை பொங்கிப் பிரவாகிக்கும் அறிகுறிகளைக் காட்டி நிற்கின்றது.

வானம்பாடிகளின் 'தாய்மடி தாங்குவோம்' 27 மணிநேரத் தொடர் இசை நிகழ்ச்சி;
கனடியத் தமிழ் மகளிரின் ஏற்பாட்டில் ரொறன்ரோ துறைமுக முகப்பில் நடத்தப்பெற்ற இருநாள் கவனயீர்ப்பு நிகழ்வு;
நியுயோர்க்கில் ஐ. நா. அரங்கில் மகிந்த ராஜபக்ஷ உரையாற்றிய வேளையில், அதன் முன்றலில் நடத்தப்பட்ட கண்டனப் பேரணி;
கனடாத் தமிழ் இளையோர் நடத்திய முப்பது மணித்தியால தொடர் உண்ணாவிரதம்;
கனடாவின் ஆறு தமிழ் வானொலி நிலையங்கள் இணைந்து தொடர்ச்சியாக இரு நாட்கள் நடத்திய விழிப்புணர்வு வானொலிச் சேவை... என்று வரலாறு படைத்த காலமாகச் செப்டம்பர் மாதம் அமைந்தது ஒரு சாதனை!

இந்த மாதம் கனடா வரும் சிறீலங்கா கிரிக்கெட் அணியினரின் முன்னால், சிங்கள அரசின் குரூர முகத்தை அம்பலப்படுத்தவும் இளையோர் உசாராகி வருகின்றனர்.

தாயக உறவுகள் துயர் துடைக்க இப்போது உருவாகியிருக்கும் விழிப்பும் வீச்சும், இவ்வருட மாவீரர் தினம் வரை மென்மேலும் எழுச்சிபெறும் அறிகுறிகளை அவதானிக்கின்றோம்.

'எங்களுக்காக நாங்கள் குரல் கொடுப்போம்' என்பது தமிழர் சிந்தனை. இன்று முடியாதென்றால், எப்போது? (If not now, when) என்று இளையோர் கேட்பது நியாயமானதே!

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல் TAMILS' INFORMATION
ISSN 1206-0585

ஸ்தாபிதம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம், ரொறன்ரோ & தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர் & தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
அன்ரன் கனகசூரியர்
குயின்ரஸ் துரைசிங்கம்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்
நா. விமலநாதன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

தமிழர் தகவல் TAMILS' INFORMATION
ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250
Fax: 416 921 6576

email
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and Production Manager
Sasi Pathmanathan

Assistant Editors
Anton Kanagasooriyar
Quintus Thuraisingam

General Manager
S.T. Singam

Circulation Manager
R. R. Rajkumar

Public Relation
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan
N.Vimalanathan

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

## 18வது ஆண்டு பூர்த்தி மலர்

**கனடியத் தமிழரின் தனித்துவமான வெளியீடாக விளங்கும் 'தமிழர் தகவல்' சஞ்சிகை, அடுத்த நான்கு மாதங்களில், 2009 ஜனவரியில் 18 அகவையைப் பூர்த்தி செய்கின்றது.**

**இதனையொட்டிய பதினெட்டாவதாண்டு பூர்த்தி மலர் வேலைகள் ஆரம்பமாகிவிட்டன. சுமார் 160 பக்கங்களுக்கும் மேலானதாக மலர் அமையும்.**

**முன்னைய ஆண்டு மலர்களைப் போன்று தகுதியும் தராதரமும் கருத்தாழமும் மிக்க கட்டுரைகளைத் தாங்கியதாக 18வது ஆண்டு மலரை வெளியிட எண்ணியுள்ளோம்.**

**புகலிட மக்களுக்குத் தேவையான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு கட்டுரைகள் அமைய வேண்டியது அவசியம். சாதாரண கட்டுரைகள் 1500 சொற்களுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். விசேட தன்மையுள்ள, மற்றும் ஆய்வு சம்பந்தப்பட்ட கட்டுரைகள் மட்டும் 2000 வரையான சொற்களைக் கொண்டதாக இருக்கலாம்.**

**தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் கட்டுரைகள் அமையலாம்.**

**ஏற்கனவே வெளியான கட்டுரைகள் ஏற்கப்பட மாட்டாது. புனைகதை இலக்கியங்களும் ஏற்கப்பட மாட்டா.**

**2008 நவம்பர் மாதம் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை கட்டுரைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.**

**மின்னஞ்சல் மூலமாக அனுப்ப வேண்டிய முகவரி:** tamilsinfo@sympatico.ca

தபால் மூலமாக அனுப்ப வேண்டிய முகவரி: 18th Anniversary Issue, Tamils' Information, P.O.Box - 3, Station - F, Toronto, Ontario, M4Y 2L4. Canada

**பிரதம ஆசிரியருடன் தொடர்பு கொள்ள விரும்பின், 416 920 9250 இலக்கத்தில் உங்கள் பெயரையும் தொலைபேசி இலக்கத்தையும் பதிவு செய்தால், தாமதமின்றித் தொடர்பு கொள்ளப்படும்.**

# கனடிய பொதுத் தேர்தல் 14ஆம் திகதி
# நம்பிக்கையிழக்கும் கருத்துக் கணிப்புகள்
# தலையைப் பிய்க்கும் கட்சித் தலைமைகள்

இந்த மாதம் 14ஆம் திகதி கனடாவின் நாற்பதாவது பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளது. கன்சர்வேடிவ், லிபரல், என். டி. பி, பசுமைக்கட்சி ஆகியவை நாடளாவிய ரீதியில் போட்டியிடுகின்றன.

என். டி. பி மட்டுமே 308 தொகுதிகளிலும் போட்டியிடுகின்றது. கன்சர்வேடிவ்வும் லிபரலும் 307 தொகுதிகளில் போட்டியிடுகின்றன. பசுமைக்கட்சி 306 தொகுதிகளில் போட்டியிடுகின்றது. மாகாணக் கட்சியான புளொக் கியுபெக்கா, கியுபெக் மாகாணத்தின் 75 தொகுதிகளிலும் அபேட்சகர்களை நிறுத்தியுள்ளது.

லிபரல் கட்சித் தலைவர் ஸ்ரெபனி டியோனின் தொகுதியில் பசுமைக் கட்சியும், பசுமைக் கட்சித் தலைவி எலிசபெத் மேயின் தொகுதியில் லிபரலும் அபேட்சகர்களை நிறுத்தாதது குறிப்பிடத்தக்கது.

கடந்த மாதம் நாடாளுமன்றம் கலைக்கப்படும்போது கட்சிகளது எம். பிக்களின் தொகை பின்வருமாறு அமைந்திருந்தது. கன்சர்வேடிவ் 127, லிபரல் 95, புளொக் கியுபெக்கா 48, என். டி. பி 30, பசுமைக்கட்சி 01, சுயேட்சைகள் 03, காலியிடம் 04. இந்த நான்கு தொகுதிகளுக்குமான இடைத் தேர்தல்கள் கடந்த மாதம் நடைபெறவிருந்தன.

தேர்தலில் தெரிவாகும் புதிய அரசாங்கமும் சிறுபான்மையானதாகவே இருக்குமென அதனைக் கலைத்த போது பிரதமர் ஸ்டீபன் ஹாப்பர் கூறியிருந்தார். அது லிபரலா அல்லது கன்சர்வேடிவ்வா என்ற கேள்வியுடன் தேர்தல் பிரசாரம் ஆரம்பமாகியது.

ஆனால், இரண்டு மூன்று நாட்களுக்கு ஒரு தடவை வெளிவரும் வெவ்வேறு நிறுவனங்களின் கருத்துக் கணிப்புகள் மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்துகின்றன. கட்சித் தலைமைகள் தலையைப் பிய்த்துக் கொள்கின்றன. சில சந்தர்ப்பங்களில், இக்கணிப்புகளை ஏற்க முடியாதென்று பகிரங்கமாகக் கட்சித் தலைவர்கள் கூறுமளவுக்கு நிலைமை மாறியுள்ளது.

உண்மையைச் சொல்வதானால், இந்தக் கருத்துக் கணிப்புகள் நம்பகத்தன்மையை மக்களிடம் இழந்துள்ளன; இவைகளை நடத்தும் முறையும் வகையும் ஏற்கக்கூடியதாக இல்லை. சம்பந்தப்பட்ட கருத்துக் கணிப்பு நிறுவனங்களினதும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட ஊடகங்களினதும் அரசியல் சார்புநிலையை கணிப்பறிக்கைகள் அப்பட்டமாகச் சித்தரிக்கின்றன.

செப்டம்பர் மாத இறுதியிலிருந்த நிலைவரத்தின்படி, மற்றைய சகல கட்சிகளையும்விட என். டி. பிக்கான செல்வாக்கு அதிகரித்திருந்தது. தேர்தல் முடிவில், லிபரலும் - என். டி. பியும் பெறும் ஆசனங்களின் கூட்டுத் தொகை, கன்சர்வேடிவ்வை விட அதிகமாக இருக்குமானால், லிபரல் ஆட்சியமைக்கத் தாம் ஆதரவு வழங்கத் தயாராக இருப்பதாக ஜாக் லேட்டன் தெரிவித்திருந்தார்.

ஆனால், உடனடியாகவே லிபரல் தலைமைப்பீடம் இந்த ஆதரவை நிராகரித்து விட்டது. ஜாக் லேட்டனின் இந்த ஆதரவு அறிவிப்பு, கன்சர்வேடிவ்வை இலகுவாக ஆட்சிக் கதிரையைக் கைப்பற்ற உதவிவிடும் என்பது லிபரலின் அச்சம்.

லிபரல் கட்சியின் உட்பூசல் முற்றுக்கு வராத நிலையில், தேர்தலுக்கு முகம் கொடுத்து வெற்றியைப் பெற முடியாத அதன் அவலம் பளிச்செனத் தெரிகின்றது. எனினும், சில கருத்துக் கணிப்புகள் லிபரலுக்கு செல்வாக்கு அதிகரித்து வருவதாகச் சொல்லி வருகின்றன.

கன்சர்வேடிவ் கட்சியைப் பொறுத்தளவில் அதன் வெற்றி ஒருவரையே சுற்றி நிற்கின்றது. அவர், அதன் தலைவரும் பிரதமருமான ஸ்டீபன் ஹாப்பர். எனவே, கன்சர்வேடிவ்வின் வெற்றி-தோல்வி இரண்டையும் நிர்ணயிப்பவராக இவரேயுள்ளார்.

தமிழ் வாக்காளர்களைப் பொறுத்தளவில் அவர்கள் நன்கு சிந்தித்து, பலவற்றையும் அலசி ஆராய்ந்து சுதந்திரமாக வாக்களிக்க வேண்டும்.

வாக்களிப்பது உரிமை; இது சலுகையல்ல. உரிமையை எவரும் இழக்கக் கூடாது.



எஸ்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். சண்முகராஜா
RN, Dip. Nursing Ed.

# சர்க்கரையோடு எச்சரிக்கை தேவை-5

எண்சாண் உடம்பில் எழில்முகத்துக் கெத்தனையோ
கண்கவரும் ஒப்பனைகள் சூட்டுகிறீர் - மண்ணிலுமைத்
தாங்கும் இருகால் தனைத்தினமும் பேணிவிடில்
நீங்கும் நெடுங்கால நோய்.

முன்னைய 4 தொடர்களிலும் நீரிழிவு நோய் பற்றிய பல்வேறு தகவல்களைப் பகிர்ந்து கொண்டேன். இக்கட்டுரையில் நீரிழிவு நோயினால் ஏற்படக்கூடிய நாட்பட்ட சிக்கல்கள் பற்றிய முக்கிய தகவல்களை அறிந்துகொள்வோம். நாட்பட்ட சிக்கல்கள் பொதுவாக குருதிக் குழாய்களில் ஏற்படும் பாதிப்பினால் உண்டாகின்றன. நுண்ணிய குருதிக் குழாய்களில் ஏற்படும் பாதிப்பினால் கண்கள், சிறுநீரகம், நரம்புகள் ஆகிய உடலுறுப்புகள் பாதிப்படைகின்றன. மூளை, இதயம் போன்ற உறுப்புகளிலுள்ள முக்கியமான பெரிய குருதிக்குழாய்களில் ஏற்படும் பாதிப்பினால் பக்கவாதம், மாரடைப்பு போன்ற உயிராபத்தான நோய்கள் உண்டாகின்றன. இவ்விரு நோய்கள் பற்றிய விபரமான தகவல்களை ஏற்கனவே தமிழர் தகவல் இதழில் உங்களுடன் பகிர்ந்து கொண்டுள்ளேன். இது தவிர குருதிக்குழாய்களில் ஏற்படும் பாதிப்புடன் நரம்பிலே ஏற்படுகின்ற பாதிப்பும் சேர்ந்து கால்களில் பாரிய சிக்கல்களை உண்டாக்கி விடுகிறது. இனி இந்த நாட்பட்ட சிக்கல்கள் பற்றிய முக்கிய தகவல்களைப் பார்ப்போம்.

**கண்களில் ஏற்படும் சிக்கல்கள்**

நாட்பட்ட சிக்கல்களில் கண்களில் ஏற்படும் நோய்கள் பாரிய சிக்கலாகக் கருதப்படுகிறது. இது Diabetic retinopathy என ஆங்கிலத்தில் அழைக்கப்படுகின்றது. கண்ணின் உட்பகுதியிலுள்ள விழித்திரை (retina) எனப்படும் படலத்தின் பின்புறத்தில் பாதிப்படைந்த நுண்ணிய குருதிக் குழாய்களிலிருந்து புரதம், குருதி ஆகியன கசிவடைகின்றன. சிலவேளை சிறிய குருதிக்குழாய்களில் வெடிப்பு ஏற்பட்டு விழித்திரையின் பின்னால் குருதிப் பெருக்கு உண்டாகிறது. இவற்றினால் கண்பார்வையில் கோளாறு ஏற்படுகிறது. நீரிழிவு நோயையும் உயர் குருதி அமுக்கத்தையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்காதவர்களில் இச்சிக்கல் ஏற்படும் சந்தர்ப்பம் துரிதமடைகிறது. தற்போது லேசர் சிகிச்சை முறை மூலம் இச்சிக்கலுக்கு ஓரளவு வெற்றிகரமான பலன் கிடைக்கிறது என்பது ஆறுதல் தரும் விடயமாகும்.

இது தவிர Cataract எனப்படும் விழியிலுள்ள வில்லைகளில் ஏற்படும் நோயும் Glaucoma எனப்படும் விழியினுட் பகுதியிலுள்ள அமுக்கம் அதிகரிப்பதால் ஏற்படும் நோயும் நீரிழிவு நோயாளரில் அதிகமாகக் காணப்படுகிறது. இந்த நோய்களும் கண்பார்வை இழப்புக்கு காரணமாகின்றன. நீரிழிவைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதும் ஒவ்வொரு ஆண்டும் கண் பரிசோதனை செய்து கொள்வதும் இவ்விரு நோய்களையும் கட்டுப்படுத்தவும் கண்களில் ஏற்படும் சிக்கல்களை ஆரம்ப நிலையில் கண்டறிந்து சிகிச்சை பெறவும் அதன் மூலம் கண்பார்வையைத் தக்கவைத்துக் கொள்ளவும் உதவும்.

**சிறுநீரகத்தில் ஏற்படும் சிக்கல்கள்**

நீரிழிவு நோயினால் சிறுநீரகங்களில் எற்படும் சிக்கல்கள் diabetic nephropathy என ஆங்கிலத்தில் அழைக்கப்படுகிறது. ஆரம்பத்தில் நீரிழிவு நோயினால் பாதிப்படைந்த சிறுசீரகத்திலுள்ள குருதிக் குழாய்களிலிருந்து புரதம் கசிவடைந்து சிறுநீருடன் வெளியேறுகிறது. நாளடைவில் சிறுநீரகம் குருதியிலிருந்து கழிவுகளை அகற்றுகின்ற தனது தொழிற்பாட்டை இழந்து விடுகிறது. நோயாளி இந்த நிலையை அடையும்போது குருதியிலுள்ள கழிவுகளை அகற்றுவதற்கு Dialysis என அழைக்கப்படும் இயந்திரத்தைப் பாவித்து கழிவகற்றும் சிகிச்சை முறையை மேற்கொள்ள வேண்டிவரும். அல்லது சிறுநீரக மாற்றுச் சிசிச்சை செய்து கொள்ள வேண்டியிருக்கும். சிகிச்சை மேற்கொள்ளாதவிடத்து குருதியில் நச்சுக் கழிவுகள் சேர்ந்து கொள்ள உயிராபத்தான விளைவுகள் ஏற்படலாம். சிறுநீரகத்தில் ஏற்படக்கூடிய இந்தச் சிக்கலை அல்லது அது தீவிரமடைகின்ற நிலையை நீரிழிவையும் உயர்குருதி அமுக்கத்தையும் நன்கு கட்டுப்படுத்தி வைத்திருப்பதன் மூலம் தவிர்த்துக் கொள்ளலாம்.

**நரம்புகளில் ஏற்படும் சிக்கல்கள்**

நீரிழிவு நோயாளரில் நரம்புகளில் ஏற்படும் சிக்கல்கள் diabetic neuropathy என ஆங்கிலத்தில் அழைக்கப்படுகிறது. நீரிழிவு நோயாளரில் நுண்ணிய குருதிக்குழாய்களின் பாதிப்பால் நரம்புகளுக்கு குருதி விநியோகம் குறைந்து நரம்புகள் பாதிப்படைகின்றன அல்லது இறந்து போகின்றன. இதன் விளைவாக உடலின் எந்த உறுப்பும் பாதிப்படையலாம். இரைப்பை, குடல், இதயம், நுரையீரல், பாலியல் உறுப்புகள் போன்றவற்றிற்கான நரம்பு விநியோகம் பாதிப்படையலாம். பாதிப்புக்குள்ளாகும் உறுப்பைப் பொறுத்து அதனுடன் சம்பந்தமான குணங்குறிகள் ஏற்படும். எனினும் கை, கால்களில் ஏற்படும் பாதிப்பு பொதுவாகப் பெரிதாகக் காணப்படுகிறது.

கை, கால்களில் விறைப்பு, எரிவு, உளைவு, வலி போன்ற அறிகுறிகள் ஏற்படுகின்றன. நரம்புப் பாதிப்பால் கை கால்களில் ஏற்படும் கடுமையான வலிக்கு மருந்துகளால் சிகிச்சை பெற முடியும். இது தவிர, நீரிழிவு நோயாளரில் சருமம் வரட்சியாகவும் இலகுவில் பாதிப்படையக் கூடியதாகவும் இருக்கும். அத்துடன் நரம்புகளில் ஏற்படும் பாதிப்பால் தொட்டுணர்ச்சி முழுமையாக இழந்து போகும்போது கைகால்களில் உணரும் தன்மை முற்றாக இழந்து போக காயங்கள் இலகுவாக ஏற்பட்டு விடுகின்றன. நீரிழிவு நோயாளரில் கால்கள் போன்ற உறுப்புகளுக்கு குருதி விநியோகம் குறைவடைந்து காணப்படுவதால் மிகச் சிறிய காயம் ஏற்பட்டால் கூட இலகுவில் குணமடையாது. பாரிய தொற்றாகப் பெருகி இழையங்கள் அழுகி Diabetic gangrene எனப்படும் பாரிய சிக்கல் ஏற்படுகிறது. இந்த நிலை ஏற்பட்டால் அழுகல் ஏற்பட்ட உறுப்புப் பகுதிகளை வெட்டி அகற்ற வேண்டிய நிலை ஏற்பட்டு விடுகிறது. அதிக கவனமில்லாமல் இருந்து விட்டால் விரல்களிலிருந்து கால்கள் வரை இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டு விடலாம். இதனால் நீரிழிவு நோயாளர் முகத்துக்கு கொடுக்கின்ற கவனிப்பை விட கால்களுக்கு கூடிய கவனம் கொடுக்க வேண்டியது மிக முக்கியம்.

**கால்களுக்குரிய கவனிப்பு**

வெள்ளம் வருமுன் அணைகட்ட வேண்டியது அவசியம் அல்லவா? கீழே குறிப்பிட்ட வகையில் நாளாந்தம் கால்களை உரிய முறையில் கவனித்துப் பராமரிப்பதன் மூலம் காயங்களும் பாரிய தொற்றுக்களும் ஏற்படுவதைத் தடுக்கலாம்.

கால்களை மிருதுவான வெந்நீரில் மென்சோப்பு பாவித்து கழுவுங்கள். கால்களை நீண்ட நேரம் நீரில் ஊறவைக்க வேண்டாம். அது சருமத்தை வரட்சியடையச் செய்யும். பின்பு கால்களை மிருதுவான துவாயினால் ஈரமறத் துவட்டவும். விரல்களுக்கிடையில் கவனம் செலுத்தி துவட்டுவது அவசியம்.
கால்கள், பாதங்கள், விரல்களுக்கிடையிலுள்ள பகுதிகள் ஆகியவற்றில் காயம், வெட்டு, வெடிப்பு, கொப்புளம் போன்ற ஏதாவது காணப்படுகிறதா என நன்கு அவதானிக்கவும்.
கைக்கண்ணாடி ஒன்றைப் பாவித்து பாதத்தின் கீழ்ப் பகுதியை அவதானிக்கலாம். காயம் ஏதாவது காணப்பட்டால் அந்த இடத்தை மிருதுவான சோப்பு போட்டு நீரினால் கழுவித் துடைத்தபின் காயத்தை மூடும் ஈரமற்ற துணியினால் (dry dressing) மூடிக்கட்டவும். நகம் வெட்டியால் (nail clipper) கால் நகங்களை நேராக வெட்டவும். நகங்களை ஆகக் குட்டையாக வெட்டக்கூடாது. நகத்துடன் சேர்ந்துள்ள சருமம் வெட்டுப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது முக்கியம். வெட்டிய நகத்தின் கூர்மையான பகுதிகளை நக அரத்தினால் மெதுவாக அராவி விடவேண்டும். நமது நகங்களாலேயே நமக்கு காயம் ஏற்படலாமாதலால் நகங்களை வெட்டி வைத்திருப்பது அவசியம். குதி பாதம் ஆகிய பகுதிகளுக்கு சருமத்தை மிருதுவாக்கும் திரவம் (lotion) (31ம் பக்கம் வருக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**A conference on Sri Lankan diaspora that took place last month in Kualalampur provided an opportunity to understand the broad perspectives of the Eezham Tamil diaspora, its universal aims and development agenda on one hand and to witness the subtle efforts by certain elements to nullify its identity and hijack its noble agenda to the diplomatic benefit of the Sri Lankan state on the other hand, according to a Malaysian Tamil scholar.**

# 'It is now the Tamil diaspora'

"The Colombo government and its abettors either believe or want others to believe that the course of military solution opted by them to end the Tamil crisis in Sri Lanka has become successful and very near its goal," the scholar told TamilNet.

"The image they try to create is that the political aspirations of Eezham Tamils will be silenced once and for all in a couple of months and thereafter the task is to only deal with a defeated people."

It is a well-known fact that one of the fundamental strengths of Eezham Tamils is the diaspora, without the involvement of which nothing decisive can take place in Sri Lanka.

The Eezham Tamil diaspora today is found spread in all the continents of the world and even conservative estimates place the number between one and a half and two million.

The very existence of this diaspora bound by a common Eezham Tamil identity and its networking is seen as one of the foremost challenges to those who want to uphold a united Sri Lanka by show of force. More over, this is largely a diaspora victimized by the Sri Lankan state and is hostile to it. The diaspora pricks the prying eyes concerned at the moment.

Meticulous efforts are being made for sometime now by Colombo, its international abettors and by other aspirants for united Sri Lanka to capture the soul and mind of this diaspora, not by straight forward means of meeting the Tamil aspirations but by intimidation, insinuation and by catering to the greed of certain affluent sections of the diaspora.

Impelled by the needs of the situation, the Eezham Tamil diaspora today, especially the new diaspora, is vigilant and vibrant.

A conference on Sri Lankan diaspora that took place last week in Kuala Lumpur provided an opportunity to understand the broad perspectives of the Eezham Tamil diaspora, its universal aims and development agenda on one hand and to witness the subtle efforts by certain elements to nullify its identity and hijack its noble agenda to the diplomatic benefit of the Sri Lankan state on the other hand, according to a Malaysian Tamil scholar.

The conference was organized by the Federation of Malaysian Sri Lankan Organisations (FOMSO) in Malaysia in collaboration with the Department of Indian Studies of the University of Malaya.

The federation and the term Sri Lanka found in this context are new to Malaysia, introduced only in 2003. As the eminent historian of Malaysia, Professor Emeritus Khoo Kay Kim rightly pointed out in his speech in the conference there were no Sri Lankans in Malaysia. They were Ceylonese or rather Jafanese (people from Jaffna) largely and a few Sinhalese. Today they are classified under the category of 'Others' in the Malaysian population, roughly numbering to 50,000 Tamils and 5000 Sinhalese.

For a long time the Ceylonese, predominantly Jaffna Tamils, were proud of their Ceylonese identity and refused to even identify themselves with the Indian Tamils of Malaysia. The recent forging of a federation of Ceylonese associations under the banner of Sri Lanka itself is considered to be a feat diplomatically favouring the Sri Lanka government. When the present day Eezham Tamils have rejected the State of Sri Lanka their five generations old diaspora has all of a sudden discovered Sri Lanka. It is said that many of the affluent members of this diaspora have business interests in Colombo.

The conference of the federation, 'Sri Lankan Diaspora, the Way Forward', conducted in the University of Malaya premises and its associated social gatherings were earnestly attended by the High Commissioner of Sri Lanka in Malaysia. There was also an orchestrated group of attendees from Sri Lanka, thanks to the contacts of some among the organizers.

Dr. Jehan Perera addressing the conference in Malaysia Tan Sri Dr Khoo Kay Kim, a Malaysian historian and a Professor Emeritus at the University of Malaya, addressing the audience. K Kesavapany, former Singapore's High Commissioner to Malaysia, currently the Director of the Institute of Southeast Asian Studies, delivers keynote address. The Chairman of the Organising Committee of the conference, A/P Datuk Dr. D. M. Thuraiappah.

One of the speakers, Dr. Jehan Perera, an intellectual peace activist from Colombo, was quick to grasp the opportunity in appreciating the theme behind the unifying title of the conference. He later wrote to the United Press International that "if the Tamil diaspora wishes to come to the aid of the Tamil people in Sri Lanka, they need to be prepared to engage constructively with the Sri Lankan state, and find ways to do so. It also means that the Tamil diaspora has to reconsider its separatist option and be prepared to accommodate itself to the reality that the LTTE's military force will not win peace, happiness and prosperity for the Tamil people in the homeland".

A large section of the activists of the Ceylonese Tamil community, especially its younger generation boycotted the conference. The students of the Indian Studies Department also boycotted it. They were not happy about the theme and motives of the conference and the organizers.

Nevertheless, a meaningful gathering of scholars came from different parts of the world, covering potential and hitherto untouched issues related to Tamil diaspora such as its unique attributes, strategies of negotiating with the global community, statistics, directory, Tamil language teaching centre, a diaspora university, museum, cultural institutions, economy, youth issues, gender issues, employment opportunities, business opportunities etc. They were either not aware of the credibility of the organization or chose to use the forum to present the case of the Tamil diaspora to the Tamil diaspora. The pivotal point made by them was that the diaspora has to look after itself. Some of the profound ideological, practical and research points made by them have to be brought out through various other channels if they have to reach the attention of the diaspora to which actually they were meant for.

Some well-known Tamil diaspora scholars whose names were in the conference web display for a long time opted not to come.

Interesting issues were raised when it came to continuing similar discourses on the diaspora in future in different parts of the world. It was pointed out by most of the participants at a committee level that proceedings of such conferences will not be acceptable and will be viewed with suspicion by the predominant section of the diaspora, i.e., the Tamil diaspora, if the theme is going to be the 'Sri Lankan diaspora'.

It has also been pointed out that conducting such conferences for the benefit of the Tamil diaspora, with the spontaneous participation of the diaspora is not possible in any part of the world where the Tamil diaspora live, if the name tag is Sri Lanka. The diaspora has the freedom to choose the term for its identity.

A point, said to be a practical issue, brought out by some of the participants was that the term 'Tamil' is not acceptable to any of the governments or universities facilitating such conferences. The next conference is scheduled to take place in Germany.

(Contd.: pg28)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மணி வேலுப்பிள்ளை
எழுதும் புதிய தொடர் -06

**put** the baby **to bed** = குழந்தையைப் படுக்க வை
**make the bed** = படுக்கை விரி (படுக்கையைத் தயார்செய்)
**confined to bed** = நோய்கண்டு படுத்திரு
a river **bed** = ஆற்றுப் படுகை
a flower **bed** = பூம்பாத்தி
a **bed of roses** = சொகுசு (மலர்ப் படுக்கை)
**get out of bed on the wrong side = get up on the wrong side of the bed** = நாள் முழுவதும் சிடுசிடுத்துக் கொண்டிரு (முழிவியளம் பிழைத்துப் போயிரு)
**take to your bed** = படுத்துத் தேறு
**bed and board** = படுக்கை-உணவு வசதி

**before long** = விரைவில்
**Put the cart before the horse** = மாட்டுக்கு முன்னே வண்டியைப் பூட்டு
Put your duty **before everything** = எல்லாவற்றையும் விட உன் கடமைக்கு முதன்மை கொடு
The enemy retreated **before us** = எங்களைக் கண்டு எதிர்த் தரப்பு பின்வாங்கியது

**beg them for** help = அவர்களிடம் உதவி கோரி மன்றாடு
**beg them to help you** = உனக்கு உதவும்படி அவர்களிடம் மன்றாடு
**beg leave to use the computer** = கணினியைப் பயன்படுத்த அனுமதி கோரு
**beg your pardon** = (1) (எனது தவறை) மன்னிக்கவும் தயவுசெய்து மீண்டும் கூறவும் (நீங்கள் கூறியது எனக்கு கேட்கவில்லை அல்லது விளங்கவில்லை)
**beg the question** = (1) விடை கூறப்படாத வினாவைக் கேட்க வை (2) ஐயத்துக்கிடமான ஒன்றைத் திட்டவட்டமான உண்மையாகப் பாவனை செய்து உரையாடு
**I beg to differ** = உங்கள் கூற்றுடன் நான் உடன்படவில்லை
**beg off at the last minute** = கடைசி நிமிடத்தில் கை விரி

**at the beginning of** July = ஆடி மாதத் தொடக்கத்தில்
**in the beginning** = at first = முதலில்
**In the beginning** God created the world = கடவுள் முதலில் உலகைப் படைத்தார்
**the beginning of the end** = (முடிவின் தொடக்கம்) முடிவு தொடங்கும் அறிகுறி
**the beginnings** of democracy = மக்களாட்சியின் தோற்றுவாய்

**beguile** somebody **into** believing your story = ஒருவரை வசியப்படுத்தி உனது கதையை நம்பச்செய்
**beguile the summer** singing and sancing = கோடையில் ஆடிப் பாடித் திளை
**beguiling** advertisement = வசப்படுத்தும் விளம்பரம்
Nature **beguiles me** = இயற்கை என்னை வசப்படுத்துகிறது

**in behalf of** the victims = பாதிக்கப் பட்டவர்களுக்காக
**on behalf of** our club = எங்கள் கழகத்தின் சார்பாக
Please attend the meeting **on my behalf** = எனது சார்பில் கூட்டத்தில் கலந்துகொள்ளவும்
Don't worry **on our behalf** = எங்களுக்காகக் கவலைப்பட வேண்டாம்

**behind** the door = கதவின் பின்னே
**behind** schedule = குறித்த வேளைக்குப் பிந்தி
My family is **behind me** for ever = எனது குடும்பத்தின் ஒத்தாசை எனக்கு என்றென்றும் உண்டு
What is **behind your smile**? = உனது புன்னகையின் காரணம் என்ன?
Please forget the accident which is **behind you** = கடந்தகால விபத்தை மறந்துவிடவும்
They may go, you **stay behind** = அவர்கள் போகலாம், நீ இங்கேயே இரு
**fall behind with** homework = வீட்டுப் பாடம் செய்யப் பிந்து

**belief in** God = கடவுள் நம்பிக்கை
I came here **in the belief that** you'll help me = நீ எனக்கு உதவுவாய் என்று நம்பி இங்கு வந்தேன்
religious **beliefs** = சமய நம்பிக்கைகள்
**persecution beyond belief** = நம்ப முடியாத அளவு கொடுமை

Where do these plates **belong** = இந்த தகடுகளை இடுவதற்குரிய இடம் எது?
I **belong here** = நான் இங்கே இருப்பதில் நிறைவு காண்கிறேன்
These books **belong to** me = இவை எனது நூல்கள் (இந்நூல்கள் என்னுடையவை)
We don't **belong to** any party = நாங்கள் எந்தக் கட்சியையும் சேர்ந்தவர்கள் அல்லர்
The Beiging Olympics **belonged to** China = பீஜிங் ஒலிம்பிக் விளையாட்டுக்களில் சீனா பேரெடுத்தது

**a seat belt** = இருக்கைப் பட்டி
**a country's green belt** = நாட்டின் பசுமைப் புலம்
(a remark) **below the belt** = நியாயமற்ற (கூற்று)
a record **under your belt** = நீ ஏற்கெனவே ஈட்டிய சாதனை
**belt up = buckle up** = இருக்கைப் பட்டியை அணி

a long **bench** = நீண்ட வாங்கு
**benchmark** = (1)மட்டக்குறியீடு (2)அளவுகோல்
**the bench** = (நீதிமன்ற மொழி) 1. நீதிபதி 2. நீதிபதியின் பீடம் 3. நீதிபதியின் பதவி
**bend your body** = குனி
**bend your arm** = கையை மடி
Glass and water both **bend light** = கண்ணாடியும் நீரும் ஒளியை வளைப்பவை
**bend your friend's ear about** your problem = உன் நண்பரிடம் உன் பிரச்சனை பற்றி அளந்து கொட்டு
**bend your mind to** natural language = இயல்பான மொழியில் கருத்தூன்று
**bend your efforts to** success = வெற்றிக்குப் பாடுபடு
**bend the truth** = உண்மையைத் திரி
**on bended knee(s)** = முழந்தாள் பணிந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The New HomeWork Policy
## கல்வி அமைச்சின் புதிய வீட்டுவேலைக் கொள்கை

ரொறன்ரோ கல்விச்சபை முதன் முதலாக ஜுன் 1999ல் பாடசாலை வீட்டுவேலை சம்பந்தமாகத் தனது கொள்கைகள் பற்றிய ஒரு அறிக்கையை வெளியிட்டது. இதன் பிரகாரம் வகுப்பு ஒன்றிற்கு 10 நிமிடம் என்ற வகையில் கணக்கிடப்பட்டது. அதாவது

JK - 3 = 10-30 நிமிடங்கள்
4 - 6ஆம் வகுப்பு = 30-60 நிமிடங்கள்
7 - 9ஆம் வகுப்பு = 60-90 நிமிடங்கள்
10 - 12ஆம் வகுப்பு = 60-120 நிமிடங்கள்
OAC = 90-180 நிமிடங்கள்

இது அமலாக்கப்பட்ட காலத்தில் 13ஆம் வகுப்பும் காணப்பட்டது. இதனை நடைமுறைப்படுத்த ஆரம்பித்தவுடன் மாணவர்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும், பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் வீட்டு வேலை பெரும் சுமையாகக் காணப்படுவதாகவும், பிள்ளைகளுக்கு விளையாட்டு நேரம் (Play Time) இல்லாமல் போய்விட்டதாகவும், பெற்றோருக்கும், பிள்ளைகளுக்கும் குடும்ப நேரம் (Family Time) அற்றுப் போய்விட்டதாகவும் எதிர்ப்புகள் தெரிவிக்கத் தொடங்கினார்கள். இது என்ன தேவையில்லாத எதிர்ப்பு என நாம் கருதலாம் - ஆனால் உண்மையில் இன்று வீடுகளில் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் ஒப்படை-களைச் செய்வதற்கு பெற்றோரே பெரிதும் உதவி செய்கிறார்கள். பெற்றோருக்கு இவை பற்றிய விளக்கம் இல்லாதவிடத்து பிரத்தியேக ஆசிரியர்களை நாடிச் செல்கிறார்கள். எவ்வளவுக்கு வீட்டில் வசதியும், அறிவும் காணப்படுகிறதோ அவ்வளவுக்கு பிள்ளைகளின் ஒப்படைகளும் மிகவும் உயர்ந்த தரத்தைக் கொண்டுள்ளது. ஒரு பெரிய ஒப்படையை மாணவர்கள் வீட்டிற்குக் கொண்டு சென்றவுடன் வீட்டில் கார் ஓட்டம் ஆரம்பமாகி விடுகிறது - நூல் நிலையங்களுக்குச் செல்வது, கடைகளுக்குச் சென்று அட்டைகள், படங்கள் இன்னோரன்னவற்றை வாங்குதல், கணினியில் உசாவுதல், பின்பு எல்லாவற்றையும் தட்டச்சில் போடுதல், ஒட்டுதல், வெட்டுதல் என இரவிரவாக பிள்ளைகளும், பெற்றோரும் நித்திரை முழிக்கிறார்கள். 9ஆம் வகுப்பு மாணவனின் விடை 12ஆம் வகுப்பு மாணவனின் தரத்தினை ஒத்ததாக அமைகிறது. வசதி படைத்த பிள்ளைகள் இவ்வாறு செயல்படும் பொழுது, ஆங்கில அறிவு இல்லாத பெற்றோரின் பிள்ளைகள், ஏன் சில சமயங்களில் பெற்றோரைப் பிரிந்து வாழ்வதால் பேரன், பேத்தியுடன் கூடிய நாட்களைச் செலவழிக்கும் பிள்ளைகள் போன்றோர் தாங்களாகவே வீட்டு வேலைகளைச் செய்ய வேண்டியுள்ளது. இவை அவர்களின் வகுப்புக்கு உரிய தரத்தினைக் கொண்டவையாக இருந்தாலும், ஏனைய திறமான மாணவர்களின் ஒப்படைகளோடு தான் இவற்றை ஒப்பிட்டு புள்ளிகள் வழங்க வேண்டியுள்ளன. சில குடும்பங்களில் 3, 4 பிள்ளைகள் இருந்து விட்டால் கல்வி அறிவு உள்ள பெற்றோர்களால் கூட வேலையால் வந்த பின்பு இவர்களின் ஓட்டத்திற்கு ஈடு கொடுக்க முடியாது. வீட்டு வேலைக்கும் புள்ளிகள் வழங்கப்படுவதும், அவை அவர்களின் கூட்டுத் தொகையை (Summative evaluation) பாதிப்பதும் பெற்றோரை இவ்வாறு பிள்ளைகளுக்கு உதவ வேண்டிய நிலைக்குத் தள்ளி விடுகிறது. ஆகவே வீட்டு வேலை பற்றி பெற்றோர் முறைப்படுவதை எம்மால் விளங்கிக் கொள்ள முடிகிறது.

இங்கு எந்த ஒரு சிறு விடயத்திற்கும் செவி சாய்க்கும் கல்விச்சபை இது சம்பந்தமாக பெற்றார், கல்விமான்கள், சமூகத்துடன் பாரிய கலந்தாலோசித்தலை மேற்கொண்டுள்ளது (extensive consultation with parents, educators, and community). இதன் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு புதிய ஒரு கொள்கை April 16 - 2008 இல் தயாரிக்கப்பட்டுள்ளது. இது செப்டம்பர் 2008 முதல் அமலில் இருக்கும் என கல்விச்சபை



**கனகேஸ்வரி நடராஜா**
ஆசிரியர், இலங்கை-கனடா

அறிவித்துள்ளது. இதனை மேலெழுந்தவாரியாக நோக்கில் இதுதான் இதன் சாராம்சம் - Kindergarten பிள்ளைகளுக்கு வீட்டுவேலை கொடுக்கப்பட மாட்டாது, கீழ் பிரிவு பாடசாலைப் பிள்ளைகளுக்கு (elementary students) வாசிப்பு மாத்திரம், 7,8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ஒரு மணித்தியாலத்திற்கு அதிகரிக்காமல் இருத்தல் வேண்டும், இரண்டாம் நிலைப் பாடசாலை மாணவர்களுக்கு 2 மணித்தியாலங்களுக்கு கூடாமல் இருத்தல் வேண்டும். ஏற்கனவே பல வீடுகளில் பிள்ளைகள் இரவில் "எங்களுக்கு வீட்டுவேலை ஒன்றும் இல்லை" என்று சொல்லிவிட்டு தாராளமாக கணினி முன்பாகவும், தொலைக்காட்சிப் பெட்டியின் முன்பாகவும் இருக்க ஆரம்பித்து விட்டார்கள். பெற்றோரும் வீட்டுவேலை இல்லைதானே என அசிரத்தையாக இருக்கத் தொடங்கி விட்டனர். இங்குதான் நாம் மிகவும் அவதான-மாக இருத்தல் வேண்டும்.

ஆங்கிலத்தில் "Reading between the lines" என்று ஒரு கூற்று உண்டு. அதாவது வரிகளுக்கு இடையில் வாசித்தல் என்பதாகும். இங்கு பல விடயங்களை நாசுக்காகத் தெரிவிப்பார்கள். அவற்றை அவதானமாக வாசித்து விளங்கிக் கொள்வது பெற்றோரது தலையாய கடமையாகும். பிள்ளைகள் ஏற்கனவே புதிய வீட்டுவேலைக் கொள்கை என்ற ஒரு பிரசுரத்தை வீட்டிற்குக் கொண்டு வந்திருப்பார்கள். அதில்:-

Kindergarten - வீட்டுவேலை இல்லை. ஆனால் பெற்றோர் பிள்ளைகளோடு விளையாட வேண்டும், கதைக்க வேண்டும், வாசிக்க வேண்டும், சமைக்க வேண்டும் - இதற்கான செயல்களைச் செய்வதற்கு ஆசிரியர்கள் தேவையானவற்றைத் தந்து உதவுவார்கள் (Resources). இங்கு பெற்றோர் பிள்ளைகளோடு போதிய நேரத்தை கழிக்க வேண்டும், அவர்களோடு சேர்ந்து வாசிக்க வேண்டும், சமையல் அறையில் கூட அவர்களைக் கூட்டிச் சென்று கலந்துரையாட வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள். இவை பிள்ளைகளின் மனவளர்ச்சிக்காகவே கூறப்படுகின்றது. பிள்ளை தன்பாடு, தாயார் தன்பாடு என்ற நிலைதான் எங்கள் குடும்பங்களில் காணப்படுகிறது. இதில் கூட வாசிப்பு என்பது ஆங்கிலத்தில் தான் இருக்க வேண்டும் என்பதல்ல, தாய் மொழியிலும் இருக்கலாம் என அறிவித்துள்ளார்கள். ஆகவே "எமக்கு ஆங்கிலம் தெரியாது" என எந்தப் பெற்றோரும் நொண்டிச் சாக்கு சொல்ல முடியாது.


சிறுபிள்ளைகளோடு பெற்றோர் அதிகளவு நேரத்தைச் செலவழிக்க வேண்டும், அவர்களுக்கு ஒரு பாதுகாப்பான மனநிலையை ஏற்படுத்தி (secure feeling) தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டும், பாடசாலையில் நடப்பவற்றைப் பற்றி கலந்துரையாடி சிறுவயதிலேயே அவர்களின் விடயங்களில் அக்கறை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே இந்த கொள்கையின் நோக்கமாகும்.

5ஆம் வகுப்புக்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகளுக்கு இரண்டாம், மூன்றாம் வகுப்புகளில் வாசிப்பே முக்கியமானதாக அமைய வேண்டும். அத்துடன் கலந்துரையாடல், விளையாடுதல் முதலியனவும் காணப்பட வேண்டும், 4,5,6,7,8 ஆம் வகுப்புகளில் ஒரு மணித்தியாலமே வீட்டுவேலை கொடுக்கப்பட வேண்டும். இவற்றை மாணவன் தானாகவே கையாள வேண்டும் (Independent work). 9-12 வகுப்புகளில் இரண்டு மணித்தியால வேலையே கொடுக்கப்பட வேண்டும். System Suprintendent of Program - Karen Grose என்பவர் - "பாடசாலை கலைத்திட்டத்திற்கு புறம்பான செயற்திட்டங்களையும் பிள்ளைகள் செய்யக்கூடிய விதத்தில் வீட்டுவேலை அமையும். அத்துடன் மாணவர்களதும் குடும்பங்களினதும் நன்மையை பேணும் வகையில் இது அமையும் என்கிறார் (Balances homework with extra curricular

→



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவிநாயகர் கந்தவனம் தரும்

## கனடியக் காட்சிகள்

### பாவாரப் பவனி

முதன் முறையாகக் கனடாவுக்கு வெளியிலிருந்து கனடியக் காட்சியை எழுதுகின்றேன்.

எழுத வைத்திருப்பது எனது பாவாரம் என்ற நூல். இது கடந்த ஆண்டு சென்னை காந்தளகத்தால் வெளியிடப்பெற்றது. காந்தளக அதிபர் மறவன்புலவு க. சச்சிதானந்தம் அவர்கள் முன்னிலையில் இவ்வாண்டு இந்து சமயப் பேரவை நடத்திய திருமுறை மாநாட்டில் பாவாரத்தை வெளியிடக் கருதினேன்.

அதனைத் தொடர்ந்து நாங்கள் இருவருமே ஐரோப்பிய பயணம் ஒன்றை மேற்கொள்ளும் திட்டமும் இருந்தது. திரு. சச்சிதானந்தம் அவர்களின் தாயார் தங்கம்மா கணபதிப்பிள்ளை அவர்கள் ஆகஸ்ட் மாதத்தில் இறைபதம் எய்தியதால் அவரால் வர முடியவில்லை.

எனினும் ஆகஸ்ட் பத்தாந் திகதி கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் நடந்த திருமுறை மாநாட்டில் பாவாரம் வெளியிடப்பெற்றது.

29. 08. 2008 வெள்ளிக்கிழமை சுவிச்சலாந்தில் சிறீவிஷ்ணு துர்க்கை அம்மன் கோவிலில் அறிமுக விழா ஒன்று நடத்தப் பெற்றது. அங்கு காந்தளகம் அனுப்பிய பாவாரப் பிரதிகளைப் பெற்று பாதுகாப்பாக வைத்திருந்தவர் 'குத்துவிளக்கு' படக் கதாநாயகன் திரு. த. நமசிவாயம் அவர்கள். விழா ஏற்பாடுகளைத் திரு. சி. தனபாலசுந்தரம் அவர்களும் ஆலயக் குருக்கள் சிவஸ்ரீ சரவணபவானந்த சர்மா அவர்களும் சிறப்பாகச் செய்திருந்தனர்.

விழாவுக்குத் தலைமை வகித்த குருக்கள் தம் முடிவுரையில் நான் எதிர்பாராத அறிவித்தல் ஒன்றைச் செய்தார். "நாளை முதல் இவ்வாலயத்தில் வசந்த மண்டபப் பூசை முடிவில் பாவாரம் ஓதப்படும்" என்று அவர் அறிவித்தபோது எழுந்த கைதட்டல் ஓய அதிக நேரம் பிடித்தது.

31.08.2008 ஞாயிற்றுக்கிழமை ஒல்லாந்து சியஸ்டா நகர அம்மன் கோயிலில் சைவ மாநாடு ஒன்று உலகச் சைவப் பேரவைத் தலைவர் வண.யோகானந்த அடிகளாரின் ஏற்பாட்டில் நடந்தது. அதிலும் பாவாரம் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஒல்லாந்து சிறீவரதராஜ செல்வ விநாயகர் ஆலயக் கலாசார மண்டபத்தில் 06. 09. 2008 சனிக்கிழமை சிவாலய தரிசன விழா நடைபெற்றது. அதில் முக்கியமான நிகழ்ச்சிகளாக பாவாரம் நூல் வெளியீடும், சிவத்தமிழச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களை நினைவு கூரும் நிகழ்வும் இடம்பெற்றன. விழாவுக்கு ஆலய சபைத் தலைவர் திரு. க. உதயகுமார் தலைமை தாங்கினார்.

வெற்றிமணி ஆசிரியர் மு. க. சு. சிவகுமாரன் தலைமையில் 21. 09. 2008 ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியிலும் பாவாரம் அரங்கேறியது. டோற்முன்ட் தமிழர் கலையகத்தில் விழா சிறப்பாக நடந்தது.

பாவாரம் எனது 42வது ஆக்கம். தொடர்ந்து எழுத எனது மனைவி மட்டுமல்ல, நண்பர்களும் ஊக்கம் தந்து கொண்டிருக்கிறார்கள். காக்கக் காக்க! விநாயகர் காக்க! ஓமோம், எனது அடுத்த பெருநூல் 'விநாயகப்பா தான்!'

## கல்வி அமைச்சின்...

activities and supports personal and family wellness). பிள்ளைகள் பாடசாலைக் கல்வியை மாத்திரம் சிறப்புற செய்த காலம் மலையேறிவிட்டது. பலவிதமான வேறு கற்றல் செயல்பாடுகளிலும் (extra curricular activities) ஈடுபடவும், சிறப்பாகச் செயல்படவும் எதிர்பார்க்கப்படுகிறார்கள். ஆகவே வீட்டுவேலைப் பளுவை கல்விச்சபை குறைத்ததற்கான காரணம் பிள்ளைகள் வெறுமே வெட்டிப் பொழுது போக்குவதற்காக அல்ல. வேறு பல பயன்தரக்கூடிய கற்றல் அனுபவங்களில் அவர்கள் ஈடுபடுவதற்காகவே. இதனை மனதில் கொண்டு பிள்ளைகளின் திறன், விருப்பு, வெறுப்புக்கு அமைய அவர்களை சிறுவயதிலேயே வேறு வகுப்புகளுக்கும் அனுப்புதல் வேண்டும். பலவிதமான தொண்டர் சேவைகளில் ஈடுபடுவதன் மூலம் இந் நாட்டு விழுமியங்களுக்கு அமைய வாழப் பழகுவார்கள்.

வீட்டுவேலை இருந்தால் தான் பிள்ளைகள் இரவில் படிக்க வேண்டும் என்பது பிழையான விளக்கமாகும். இன்று மாகாண பொதுப்பரீட்சைகள் 3,6,10 ஆம் வகுப்புகளில் காணப்படுகின்றன. இவற்றைவிட வகுப்பில் அடிக்கடி சிறு பரீட்சைகள், வினா - விடைகள் முதலியன நடைபெற்று புள்ளிகள் வழங்கப்பட்டு, அவற்றின் கூட்டு சராசரியே ஈற்றில் ஒரு பாடத்திற்குரிய புள்ளியாக வழங்கப்படுகிறது. இவற்றையெல்லாம் சாதிப்பதற்கு பாடசாலையில் நடந்ததை வீட்டில் இரை மீட்காவிட்டால் சாதிக்க முடியாது.

இது மாத்திரமன்றி அன்றாடம் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு மேசைக்குச் சென்று பிள்ளைகள் கல்வி கற்பது ஒரு கட்டுப்பாடாகும் (Decipline). இதனை சிறுவயதிலேயே பிள்ளைகள் பழகிக் கொள்ளாவிட்டால் உயர் வகுப்புகளிலோ, பல்கலைக்கழகக் காலங்களிலோ இவர்களால் ஒரு சில மணித்தியாலங்கள் கூட கட்டுப்பாட்டோடு ஒரு இடத்தில் இருந்து கல்வி கற்க முடியாது. ஆகவே வீட்டிலும் கற்பது ஒரு வாழ்க்கைத் திறன்.

கீழ் வகுப்புகளில் வீட்டுவேலை வழங்கப்படுவது அமெரிக்காவில் முற்றாகவே நிறுத்தப்பட்டுள்ளது. Ontario Institute for Studies in Education ஐ சார்ந்த Lee Bartel, Linda Cameron என்பவர்கள் வீட்டுவேலை சம்பந்தமாக மேற்கொண்ட ஆய்வில் வீட்டுவேலை பிள்ளைகளின் தரத்தை அதிகரிக்கவில்லை என முடிவு செய்துள்ளனர். ஆயினும் 7ஆம் வகுப்புக்கு மேல் ஓரளவு வீட்டுவேலை வழங்கப்படுவது நன்மையளிக்கலாம் என்கிறார். தற்பொழுது ரொறன்ரோ கல்விச்சபை பிள்ளைகளுக்கு எவ்வாறு உதவலாம் என்பது பற்றிய பல செயற்பாட்டு உதாரணங்களை சேகரிக்கத் தொடங்கியுள்ளது. பெற்றோர் தாங்கள் வீட்டில் மேற்கொண்டு வெற்றி அளித்த உதாரணங்களை homework@tdsb.on.ca என்ற வலைத் தளத்துக்கு அனுப்பும்படி கேட்கப்பட்டுள்ளார்கள்.

ஆகவே பெற்றோர் பாடசாலைகளுடன் நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்தி வீட்டுவேலை என்று கட்டாயமான ஒரு நிரல் பிள்ளைகளுக்கு வழங்கப்படா விட்டாலும், தாங்கள் எவ்வாறு அவர்களுக்கு உதவலாம் என கலந்தாலோசித்தல் முக்கியம். எமது பிள்ளைகளுக்கு எங்களிலும் பார்க்க கணினி அறிவு அதிகம் என்பது மறுக்க முடியாத உண்மை. ஆனால் அவர்களுக்கு அதில் காணப்படும் தகவல்களை சரியான முறையில் கையாளும் திறன் கிடையாது. ஆகவே கணினி முன்பு பிள்ளைகள் இருந்தால் அது கற்றல் அல்ல. கற்றல் என்பது பாடசாலை, பெற்றோர் பிள்ளைகளின் கூட்டுமுயற்சியாகும். ஆகவே பிள்ளைகளும், நாமும் பாடசாலையோடு ஒன்றிணைந்து செயல்படுவோமாக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போக்குவரத்திற்கு 'Smart Card' பாவனை


ஒன்ராறியோ மாகாணத்தில், ரொறன்ரோவைச் சூழவுள்ள நகரங்களுக்கு பயணம் செய்யும் 10 போக்குவரத்துக் கழகங்களுக்கும் பொதுவான கட்டணம் செலுத்தும் அட்டையை விரைவில் அறிமுகம் செய்யவுள்ளனர். இந்த அட்டையில் பணம் நிரப்பி, தேவையான பொழுது தேவையான போக்குவரத்துச் சேவைகளில் காணப்படும் மெசின்களில் இதனைப் பாவித்து பயணத்தை மேற்கொள்ளலாம். ஏற்கனவே மொன்றியாலில் இந்த முறை அமலில் உள்ளது. 2010ஆம் ஆண்டளவில் இந்தத் திட்டம் பெருமளவில் பயன்பாட்டில் இருக்கும் எனத் தெரிகிறது.

## விரைந்த மருத்துவ சேவைக்கு கட்டணம் செலுத்தத் தயார்

அண்மையில் ரொறன்ரோ ஸ்ரார் பத்திரிகையில் வெளிவந்த வாக்கெடுப்பின்படி, மூன்றிலொரு ஒன்ராறியோவாசிகள் மருத்துவ சேவையினை விரைவில் பெறுவதற்கு, மருத்துவ சேவைக்கு கட்டணம் செலுத்துவதையோ அல்லது வேறு நாடுகளுக்கு பயணிப்பதையோ கவனத்தில் எடுக்கத் தயார் என தெரிவித்துள்ளனர். 72% ஆனோர், இங்குள்ள மருத்துவ சேவையில் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். 43% ஆனோர் காத்திருப்புக்களை தவிர்ப்பதற்காக சில நோய்களுக்கு மருத்து சேவையினை அணுகுவதையே தவிர்த்து விடுவர் என்கின்றனர். மருத்துவசேவையின் குறைபாடுகளில் மிக முக்கியமானவை மருத்துவர்கள், தாதிமார் பற்றாக்குறையும், நீண்டகால காத்திருப்புக்களுமாகும்.

## பத்திரிகைகளை மீள்பாவனை செய்க

நடுத்தர குடும்பம் ஒன்று 90 சென்ரிமீற்றர் உயர அளவுள்ள பத்திரிகைகளை மீள்பாவனைக்குட்படுத்தினால், அது அவ்வீட்டின் மின்சார கட்டணத்தில் 14% இனைக்குறைப்பதற்குச் சமமானதாகும்.



பொன்னையா விவேகானந்தன்

## பொன்னின் பொழிகை

தொடர் 20

## முடி

பெயர்ச் சொல் வினைச்சொல் இருநிலையிலும் பொருள் தரும் இச் சொல்.

பெயர்ச்சொல்லாயின் உச்சியின் அடையாளம்.
வினைச்சொல்லாயின் ஆணையின் வெளிப்பாடு.

எந்நிலையில் இருந்து நோக்கினாலும் இச்சொல் விரிந்து பொருள் தரும் ஆழம் கொண்டது.

மனித உடலின் மேல் நோக்கிய முடிவில் இருப்பதால் இது முடி(மயிர்) எனப்பட்டது என்பர். பொதுப்பயன்பாட்டில் முடியினை புறக்கணிக்கத்தக்க ஒன்று எனும் பொருளில் கையாளுவது வழக்கம்.

'முடியைக் கட்டி மலையை இழுப்போம். வந்தால் மலை போனால் முடி' எனும் மரபு வழக்கு இதற்குச் சான்று.

முடிவற்று நீண்டு செல்லும் முடியின் அர்த்தங்களை உணர்ந்து கொள்ள, மிகச் சிறிய பொருளென முடியைப் புறக்கணிக்க முடியவில்லை.

எண்ணிக்கையில் அதிகமாக இருப்பதால் தான் முடியின் இழப்புகள் கவனிக்கப்படுவதில்லை. வலியைத் தோற்றுவித்து உதிர்வதில்லை என்பதால் முடியின் உதிர்வை எவரும் உணர்வதில்லை.

எனினும் முடியற்ற தலையை பெரிதும் விரும்புவதில்லை மனிதர்.

பலரும் தம் முடியைப் பேணுவதைப் போல், மூளையைப் பேணுவதில்லை. மூளை மேல் அக்கறை கொள்பவர்கள் பெரிதும் முடி குறித்து வருந்துவதில்லை.

முடியின் வாயிலாகவே முதுமையை வெளிப்படுத்த முயல்கின்றது இயற்கை. வெளுப்பேறும் முடிகளே வாழ்வு குறித்த ஆழத்தை மனிதனுக்கு உணர்த்தும் முதன்மையான சைகை.

இந்த சைகையை மறைக்க முயல்வது தப்பல்ல, உணர மறுப்பதுதான் தவறு.

வாழ்வில் எதிர்கொள்ளும் சிக்கல்களைத் தீர்க்கும் பயிற்சியை இளமையில் வழங்குவது இந்த முடிச் சிக்கல்கள்தான்.

தலையை மொட்டை போடுவதாய் வேண்டுதல் செய்யும் மனிதர் கண்ணையோ காதையோ தருவதாய் வேண்டுவதில்லை.

வெட்ட வெட்ட தழைக்கும் என்பதனால் மனித வேண்டுதல்கள் பலவற்றிலும் முடியே பலிக்கடாவாகின்றது.

முடிவிடத்தின் மேல் சூட்டப்படுவதால் மகுடத்திற்கும் முடி என்று பெயர். இந்த முடிக்காக முட்டி மோதிய முடிகளின் வரலாறுகள் பூமியெங்கும் நிறைந்து கிடக்கின்றன.

முடிவில் 'முடிசார் மன்னரும் பிடி சாம்பல்' என்பது மற்றுமொரு முதுமொழி. மனிதரை விடவும் பல சூழ்நிலைகளில் உயர்ந்து விடுகின்றன விலங்குகள்.

கவரிமான் எனும் விலங்குக்கு மட்டும் மயிரும் உயிரும் ஒன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ஜெகதீசன் எழுதும்

பத்தாம் பக்கம்

# தொலையும் தொல்லை ஒன்று

வீட்டிலிருந்தவாறே பொருட்களை வாங்கிக்கொள்வதற்கும் சேவைகள் சிலவற்றை பெற்றுக்கொள்வதற்கும் வசதியாக உருவானதே தொலைபேசி வர்த்தகம் - Tele Marketing.

வலுவிழந்தோர் இச்சேவையை இப்பொழுதும் வலுவாக வரவேற்க - திடகாத்திரமான பலரோ இதனை புறக்கணிக்கின்றனர்.

அதனால் தொலைபேசி சிணுங்கினாலே அலறுபவர்கள் அனேகர்.

வியாபார நோக்குடன் காதினில் கதறிடும் தொல்லை தொலையும் தொலைவு வெகு தொலைவில் இல்லை.

30.09.2008 முதல் அவற்றை கட்டுப்படுத்த அரசாங்கம் அழைக்க வேண்டாம் என கோரும் கோவையை {Do not Call List} உருவாக்கி உள்ளது.

இச்சேவை இலவசமானது. இலகுவானது.

உங்களது பெயரிலுள்ள வீட்டுத்தொலைபேசி, செல்லிடபேசி, தொலைநகல் என்பனவற்றின் வெவ்வேறு இலக்கங்களையும் கூட அழைக்க வேண்டாம் பட்டியலில் ஒருமித்தே பதிவு செய்து வரும் காலத்தை வராத காலமாக மாற்றலாம்.

மூன்று வருடங்களுக்குச் செல்லுபடியாகும் இப்பதிவு பின்னர் காலவதியாகும். மீண்டும் புதிதாக பதிய வேண்டும். இலக்கங்கள் மாற்றமடைந்தாலும் புதிய பதிவு அவசியமாகும்.

தேசியப் பட்டியலில் பதிவு செய்வதற்கு உங்கள் தொலைபேசி மூலம் அணுக வேண்டிய இலவச தொலைபேசி இலக்கம் - 1 866 580 3625. பிறரது இலக்கத்தை உங்களின் தொலைபேசி மூலம் பதிய முடியாது.

தொலைநகல் இலக்கத்தை பதிவு செய்வதற்கு இதே இலக்கத்திற்கு தொலைநகலை அனுப்ப வேண்டும்.

கேட்பது குறைவு என உணர்பவர்களுக்கு 1888 362 5889.
மின் அஞ்சல் பதிவுக்கு www.lnntedncl.gc.ca

Canadian Marketing Association, P.O.Box 706, Don Mills, Ontario.M36 2T6 என்ற முகவரிக்கு கூட உங்களது முழு பெயர் விலாசம் சகல தொலைபேசி இலக்கங்கள் உள்ளிட்ட பூரண விபரங்களையும் கடிதமூலம் அனுப்பலாம். சாவகசமாக நடவடிக்கை மேற்கொள்வர். தொலைநகல் 416 441 4062. இணையம் www.thecma.org.

சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் தமது பதிவேட்டை சீரமைக்க ஒரு மாத அவகாசம் வழங்கப்படும். அதன் பின்பும் தொடர்பு கொள்வதாக புகார் கிடைப்பின் விசாரணையின் பின் $15,000 வரை அபராதம் விதிக்கப்படும். தனியார் அதே தவறிழைத்தால் தண்டம் $ 1,500 வரை செலுத்த நேரிடும். மூறையீடு செய்தவர்களுக்கு பணம் வழங்கப்படமாட்டாது.

பதிவுசெய்யப்பட்ட தர்ம ஸ்தாபனங்கள் அரசியல் கட்சிகள் கருத்துக்கணிப்பிடும் நிறுவனங்கள் சந்தாதாரராக்கும் பத்திரிகைகள் போன்ற சிலவற்றை அழைக்க வேண்டாம் கோவை கட்டுப்படுத்தாது.

எந்த நிறுவனம் சார்பாக அழைக்கின்றீர்கள்? இது தொலைபேசி வர்த்தகமா? உங்களது முழு பெயர் என்ன? உங்கள் தொலைபேசி இலக்கம் யாது? நிறுவனத்தின் விலாசம் என்ன? அழைக்க வேண்டாம் பட்டியல் வைத்திருக்கின்றீர்களா? என்று நைச்சியமாக கேட்டாலே மிரண்டு போவார்கள் என்ற விபரம் தெரிந்தவர்கள் இப்பொழுது மனசுக்குள் விசிலடிக்கின்றார்கள்.

## பச்சைக் கீரைகளுக்கு கதிர்வீச்சு

அமெரிக்க உடல்நல உத்தியோகத்தர்கள், கீரைகளுக்கும், லெற்றியூஸ் சலாட் இலைகளுக்கும் அயனூட்டும் கதிர்வீச்சுப் பாவனைக்கு அனுமதி வழங்கியுள்ளனர். இம்முறையானது ஏற்கனவே பல உணவுப் பொருட்களுக்கு பயன்படுத்தப்படுவதன் மூலமாக, பற்றீரியாக்களையும், நோய் தொற்றிகளையும் தடுக்கக் கூடியதாகவுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். இந்தக் கதிர்வீச்சு முறையினால், பச்சை இலைகள் நீண்டகாலம் பழுதாகாமல் இருக்கும். இதனால், சுப்பர் மார்க்கட்டுகளிலுள்ள தட்டுகளில் கூடிய காலம் இருப்பது வியாபாரிகளுக்கும், நுகர்வோருக்கும் பயனளிக்கும் என்கின்றனர்.

## எரிபொருள் பாவனையை குறைப்பதற்கான வழிகள்

எரிபொருள் பாவனையும், செலவும் கூடிச் செல்வதனால், அவற்றைக் கணிசமானளவில் குறைப்பதற்கு சில ஆலோசனைகள்.

* குறிக்கப்பட்ட வேகத்தில் அல்லது சற்று குறைவாக வானத்தைச் செலுத்துதல். 100km/h வேகத்திலும் பார்க்க, 120km/h வேகத்தில் செல்கையில், 20% எரிபொருள் செலவழிகிறது. இதனையே 90km/h வேகத்தில் சென்றால் இன்னுமொரு 10% எரிபொருளை சேமிக்கலாம்.
* வேகப் பெருஞ்சாலையில் செல்கையில், cruise control இனைப் பாவிக்கவும். ஜன்னல்களை மூடி வைப்பதன் மூலம், காற்றின் எதிர் அழுத்தத்தினை குறைக்கலாம்.
* குளிரூட்டியைப் பாவிப்பின் 20% எரிபொருள் செலவு அதிகரிக்கும். பதிலாக வாகனத்தினுடைய flowthrough ventilation ஐ பாவிக்கவும்.
* சில்லினுடைய காற்றமுத்தத்தினை கவனிக்கவும். குறைவாயிருப்பின் எரிபொருள் கூடுதலாகச் செலவழியும்.
* வாகன நெரிசலை எதிர்பார்த்து சடுதியான வேகத்தடை பாவிப்பதனையும், சடுதியாக வேகத்தை அதிகரிப்பதனையும் தவிர்த்தல் வேண்டும். துரித ஆரம்பம், சடுதியான வேகத்தடை மிகக் கூடுதலான எரிபொருளை விரயமாக்கும்.
* தேவையற்ற பாரமான பொருட்களை அகற்றவும்.
* தேவையில்லாமல் வாகனத்தை இயங்கு நிலையில் வைத்திருக்கக் கூடாது.
* போகும் பயணப் பாதையை திட்டமிட்டு தொடங்குவதனால், தேவையற்ற வாகன நெரிசல், வீதித் திருத்துமிடங்களில் காத்திருப்பு போன்றவற்றை தவிர்க்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழ் தொடர்ச்சி - 2

என்னை வீட்டிற்கு கொண்டு சென்றதும் எனது ஐயாவும் அம்மாவும் கட்டி அணைத்து அன்பு காட்டி என்னைத் தண்டித்தமைக்கான காரணத்தை விளக்கிக் கூறினர். என்மேல் கொண்டுள்ள அன்பின் காரணத்தாலும், எதிர்காலத்தில் இவ்வாறான உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய தீர்மானங்களை எடுக்குமுன் பலதடவை சிந்தித்து செயற்படவேண்டும் என்ற பாடம் கற்பிக்கும் நல்நோக்கத்துக்காகவே எனக்கு அத்தண்டனை கொடுக்கவேண்டி நேரிட்டது இது நல்ல பெற்றோரின் கடமை என அமைதியாக் கூறினார் எனது ஐயா. என்னை ஆறுதல்படுத்துவதற்காக எனக்கு விருப்பமான இனிப்புப் பலகாரமும் வாங்கிக் கொடுத்தார். அவர் வெளிப்படுத்திய அன்பும், தண்டனைக்கான விளக்கமும், தண்டனை என் தேகத்தில் ஏற்படுத்திய தழும்பினால் என் அம்மாவின் கண்ணில் நான் கண்ட வேதனையும் எனக்குக் குற்ற உணர்வை ஏற்படுத்தியது. எனது பெற்றோர்களையும் சகோதரங்களையும் மனக்கலக்கத்தில் ஆழ்த்திய எனது செயலை எண்ணி நான் வெட்கப்பட்டேன், வேதனை அடைந்தேன், மனம் வருந்தினேன். ஐயா தொடர்ந்து, "தடி எடுக்காதவன் தன் பிள்ளையைப் பகைக்கிறான்" அடிக்கடி அவர் கூறும் அந்தக் கூற்றை அன்றும் கூறினார்.

நான், அந்தத் தாத்தா, நிமலன் – மூவரும் பிள்ளைகளின் நலனுக்காக பெற்றோர்கள் பிள்ளைகளை அடிப்பதைச் சரி என ஏற்றுக்கொண்ட கலாசாரத்தில் வளர்ந்தவர்கள். அடிக்கிற கைதான் அணைக்கும், அடிபோல் அண்ணன் தம்பி உதவமாட்டார், அடியாத மாடு படியாது - பிள்ளைகளை அடித்து வளர்ப்பதற்கு சாதகமான நாம் வளர்ந்த கலாசார பழமொழிகள். இருப்பினும், இந்தக் காலகட்டத்தில் எந்தக் காரணத்துக்காகவும் பிள்ளைகளை அடிப்பது உகந்ததல்ல என்ற கருத்துக்கொண்டவர்கள். பிள்ளைகளை அடிப்பதற்கு எதிரான சட்டத்தை ஆதரிப்பவர்கள். கெட்ட பெற்றோர்களிடமிருந்தும், பொறுப்பற்ற ஆசிரியர்களிடமிருந்தும், தவறான பிள்ளை பராமரிப்பாளர்களிடமிருந்தும் பிள்ளைகளைப் பாதுகாப்பதற்கு பிள்ளைகளை அடிப்பதற்கு எதிரான சட்டம் அவசியம் என்பதை வலியுறுத்துபவர்கள். பிள்ளைகளைத் திருத்துவதற்கு அடிக்க வேண்டியது அவசியமில்லை என்ற கருத்துக் கொண்டவர்கள்.

தற்பொழுது கனடிய குற்றவியல் கோவை பிரிவு 43 பிள்ளைகளின் கெட்ட பழக்கங்களை திருத்துவதற்காக பெற்றோர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களுக்கு பதிலாக பிள்ளைகளைத் தம் பொறுப்பில் வைத்திருப்பவர்கள், பிள்ளைகளை நியாயபூர்வமான பலத்தைப் பாவித்து திறந்த உள்ளங்கையால்




## மனுவல் ஜேசுதாசன்

கனடிய வழக்குரைஞர்


# பிள்ளைகளை அடிப்பது நல்லதா கெட்டதா?

அடிப்பதை அனுமதிக்கிறது. பிரிவு 43க்கு எதிராக கனடிய உயர்நீதிமன்றில் வழக்கு டிசம்பர் மாதம் 2004ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் உயர்நீதிமன்றம் அந்த வழக்கைத் தள்ளுபடி செய்து இப்பிரிவை சட்டத்தில் தக்கவைத்து 2 வயதுக்கும் 12 வயதுக்கும் இடைப்பட்ட பிள்ளைகளை மேற்கூறியவர்கள் மேற்கூறிய வகையிலும், மேற்கூறிய முறையிலும் தண்டிப்பதற்கு அதிகாரம் வழங்கியது. இந்தத் தீர்ப்பின் பின்புதான் லிபரல் கட்சியைச் சேர்ந்த செனட்டர் ஹெர்வியோ பயெற் அவர்கள் செனற் சபையில் பிள்ளைகளை அடிப்பதற்கு எதிரான மசோதாவை அறிமுகம் செய்தார். முதற்படியாக அறிமுகம் செய்யப்பட்ட மசோதா பெற்றோர்களினதும், ஆசிரியர்களினதும், மற்றும் பிள்ளைகளைப் பொறுப்பில் கொண்டுள்ளவர்களினதும் முற்று முழுதான உரிமைகளையும் அறவே அகற்றிய காரணத்தால் கொன்சவேற்றிவ் கட்சி ஆரம்பத்தில் இம்மசோதாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்தது.

இப்பொழுது செனற்சபையினால் ஏற்றுக்கொள்ளப்படுள்ள மசோதா பின்வரும் காரணங்களுக்காக பெற்றோர், ஆசிரியர்கள், பெற்றோர்களுக்குப் பதிலாக பிள்ளைகளை தமது பாதுகாப்பில் வைத்திருப்பவர்கள் பிள்ளைகளுக்கு மிகமிஞ்சிய உடல்ரீதியான தண்டனையைத் (Corporal punishment) தவிர்த்து நியாயமான பலத்துடன் திறந்த உள்ளங்கையால் அடிப்பதற்கு (Spanking) அதிகாரம் வழங்கியுள்ளது:

1. ஒரு பிள்ளைக்கோ அல்லது வேறு எவருக்கோ ஏற்படக்கூடிய ஆபத்தை தவிர்ப்பதற்காக அல்லது அந்தப் பிள்ளைக்கு அல்லது வேறு எவருக்கோ ஏற்படக்கூடிய ஆபத்தின் தன்மையை குறைப்பதற்காக;
2. ஒரு பிள்ளை குற்றவியல் செயலில் ஈடுபடவிருப்பதை அல்லது தொடர்ந்து ஈடுபடுவதை தவிர்ப்பதற்காக;
3. ஒரு பிள்ளை படுமோசமான பாதிப்பு ஏற்படக்கூடிய செயலை செய்வதை அல்லது தொடர்ந்து செய்வதை தவிர்ப்பதற்காக.

மசோதா பிள்ளைகளை அடிப்பதற்கு எதிரான மசோதா (Anti-Spanking Bill) என பரவலாக அழைக்கப்படும். இந்த மசோதவை லிபரல் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மக்கள் சபையில் அறிமுகம் செய்து வைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் லிபரல் கட்சியின் தலைவர் ஸ்ரெபான் டீயோன் அவர்களும் அக்கட்சி உறுப்பினர்களும் இம் மசோதாவுக்கு ஆதரவு வழங்குவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. கொன்சர்வேற்றிவ் கட்சியினரிடமிருந்து எதிர்ப்பு எதிர்பார்க்கப்படும் பொழுதும், அக்கட்சி உறுப்பினர்கள் தாம் விரும்பியவாறு வாக்களிக்க அனுமதிக்கப்படுவார்கள் எனவும் எதிர்ப்பர்க்கப்படுகிறது.

இம்மசோதா செனற் சபையினால் அங்கீகரிக்கப் பட்டதையிட்டு பலர் திருப்தி அடைந்த பொழுதும் வேறு சிலர் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். எதிர்ப்பவர்களின் கருத்துப்படி இம்மசோதா சட்டமாக அங்கீகரிக்கப்பட்டால் பிள்ளைகள் பெற்றோர்களை மதிக்கமாட்டார்கள் அவர்களின் நற்புத்திமதிகளைக் கேட்டு ஒழுகமாட்டார்கள் பிள்ளைகளினதும் பெற்றோர்களினதும் உறவில் இடைவெளி ஏற்பட்டு அதன் விளைவாக பிள்ளைகள் பெற்றோர்களின் அன்பையும் ஆதரவையும் இழந்துவிடுவார்கள் இத்தகைய சட்டங்கள் மூலம் அரசு தனிப்பட்ட குடும்ப விடயங்களில் தலையிட்டு பெற்றோர்களின் கடமைகளிலும், பிள்ளைகளை நல்வழி நடத்தவேண்டிய அவர்களது பொறுப்பை நிறைவேற்றுவதற்கு இடையூறாக அமைகிறது என கருதுகிறார்கள். தமது இந்த விவாதத்திற்கு அநுசரணையாக அண்மையில் கியூபெக் மாகாணத்தில் நீதிமன்றம் ஒன்று வழங்கிய தீர்ப்பை உதாரணம் காட்டுகிறார்கள்.

12 வயது நிரம்பிய பெண்பிள்ளை தந்தையின் பராமரிப்பில் குடும்ப நீதிமன்றின் தீர்ப்புப்படி வாழ்ந்து வந்தாள். சென்ற ஆனிமாதம் இப்பெண் ஆரம்ப பாடசலையில் இருந்து சித்திபெற்று கனிஷ்ட பாடசாலை ஆரம்பமாகுமுன் 'ஸ்கூல் ட்றிப்' செல்வதற்கு தனது தந்தையிடம் அனுமதி பெற்றிருந்தாள். ஆனால் அந்த 'ஸ்கூல் ட்றிப்'பிற்கு முன்னதாக வயது வந்தவர்களுக்கான இணயத்தளத்தில் தனது புகைப்படத்தை பிரசுரித்து தான் ஆண்களுடன் நட்பு (dating) கொள்வதற்கு தயார் என அறிவித்திருந்தாள். இதை அறிந்த அவளது தந்தை அவளுக்கு முன்பு தான் வழங்கிய 'ஸ்கூல் ட்றிப்'புக்கான அனுமதியை மீளப்பெற்றார். இந்த அனுமதியை மீளப்பெற்றதற்கு எதிராக 12 வயது நிரம்பிய மகள் தனது தந்தைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தாள். வழக்கை விசாரணை செய்த கியூபெக் நீதிமன்று மகளின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு தீர்ப்பு வழங்கியது. தந்தைக்கு முன்பு கொடுத்த 'ஸ்கூல் ட்றிப்' செல்வதற்கான அனுமதியை மீளப்பெறுவதற்கான உரிமை இல்லை என நீதிமன்றம் கூறியது. இந்த தீர்ப்புக்கு எதிராக அந்த தந்தை மேன்முறையீடு செய்துள்ளார்.

(22ம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column). அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.*

# இது எப்பிடி இருக்கு?

## கனடாவில் காஞ்சிவரம் என்ன வரம் தந்தது?

கனடாவில் கடந்த மாதம் இடம்பெற்ற சர்வதேச திரைப்பட விழாவில் இந்திய தயாரிப்பான 'காஞ்சிவரம்' தெரிவாகித் திரையிடப்பட்டது. தயாரிப்பாளர் பிரியதர்ஷன், நாயகன் பிரகாஷ் ராஜ் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

இவர்களுக்கு தமிழ் உறவுகள் சிலர் ரொறன்ரோவில் 'வைன் & சீஸ்' பார்ட்டி நடத்தினர், தங்கள் பாராட்டைத் தெரிவிக்க.

இறுதியில், தயாரிப்பாளர் பிரியதர்ஷன் சிற்றுரை நிகழ்த்தினார். இங்கு அவர் என்ன சொன்னார் தெரியுமா?

"நான் ஒரு இந்தியன்; இந்திய அரசு என்ன சொல்கிறதோ அதனையே நான் செய்வேன்" என்பதே அவரது உரை. இதனை அவர் வாயால் நேரடியாகக் கேட்பதற்கா இந்த விருந்து?

"வன்னியில் எமது மக்கள் பட்டினியால் வாட, இவர்களுக்கு 'வைன் & சீஸ்' விருந்து அவசியமா" என பலர் கேட்பது ஏற்பாட்டாளருக்குக் கேட்குமா?

## கனடிய வர்த்தகர்களின் மலிவு விற்பனை! Sales!

கனடியத் தமிழர் வர்த்தக நிலையங்களில் மிகவும் மலிவான விற்பனைப் பொருள், அனேகமாக வார இறுதிகளில் இங்கு நடைபெறும் மலிவு விற்பனை. Sales என்று கச்சிதமாக இதனை அழைப்பர்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் வருடப் பிறப்பு, பொங்கல், தீபாவளி, நத்தார் காலங்களில்தான் இது நடைபெற்று வந்தது. இப்போது நிலைமை மாறிவிட்டது.

அற்புத விற்பனை, அட்டகாச விற்பனை அசகாய விற்பனை, அதிரடி விற்பன, அலங்கார விற்பனை என்று புதுப்புது பெயர்களில் மலிவு விற்பனை.

"இப்படித்தான் விற்பனைகள் தொடரின், ஒரு நாளைக்கு 'பேரிடி விற்பனை'யுடன் கடையை மூடவேண்டி நேரிடலாம் என்கிறார் 'சகோதர' ஜவுளிக்கடை உரிமையாளர் ஒருவர்.

அதற்கு முதல், 'மிதிவெடி விற்பனை, கண்ணிவெடி விற்பனை, ஏ.கே. 47 விற்பனை' என்ற பெயர்களிலும் விற்பனைகள் வந்து, இறுதியாக 'வங்குரோத்து (bankruptcy) விற்பனை' வரவேண்டுமே என்கிறார் தமிழரின் உணவக உரிமையாளர் ஒருவர்.

## வாய் கிழியப் பேசுகின்ற கடைந்தெடுத்த அயோக்கி...

குமுதம் சஞ்சிகையின் செப்டம்பர் மாத கடைசி இதழில் வெளியான 'அரசு கேள்வி-பதில்' பகுதியில் பிரசுரமான ஒரு கேள்வியும் பதிலும் கீழே:

கே: விடுதலைப் புலிகள் வவுனியாவில் நடத்திய விமானத் தாக்குதலில் சிங்கள ராணுவத்துக்கு உதவும் சில இந்தியர்களும் காயம் அடைந்திருப்பதாகச் செய்திகள் வருகின்றனவே; அப்படியென்றால் இலங்கை அரசுக்கு ரகசியமாக இந்தியா உதவி வருகிறதா?

ப: தமிழக மீனவர்களின் மேல் எள்ளளவும் அக்கறையில்லாத மத்திய அரசு, இலங்கைத் தமிழர் மீது மட்டும் பாசம் காட்டுமா, என்ன? இது முதுகில் குத்துவது அல்ல; மார்பில் குத்துவது போலத்தான். தமிழ், தமிழன், தமிழர் தலைவர் என்றெல்லாம் சற்றும் கூச்சமின்றி வாய் கிழியப் பேசும் சிலர், இதில் அமைதி காப்பது கடைந்தெடுத்த அயோக்கியத்தனம், என்று பதில் அமைந்துள்ளது.

குமுதத்தில், ஞாநியின் நான்கு பக்கங்களும் நளினி விடுதலை விவகாரத்தில் கருணாநிதி எடுத்த எதிர்நிலை பற்றிப் பொறி பறக்க விளாசியுள்ளது.

கலைஞர் கருணாநிதியின் இரட்டை வேடம் கலைக்கப்படுகின்றது. இப்போது இவருக்குத் துகிலுரி காலம் போலும்!

**உதாசனன் உலா விருந்து**

## சோதனைக் குழாய் பிறப்புகளில் மோசடி!

சோதனைக் குழாய் சிகிச்சை வழியாகப் பிறந்த குழந்தைகள் விடயத்தில் இடம்பெற்ற பல மோசடிகள் இப்போது அம்பலத்துக்கு வர ஆரம்பித்துள்ளன.

பல குழந்தைகளின் ஜீன் (மரபணு) பெற்றோரின் ஜீனுடன் ஒத்துப் போகவில்லை என்பது டி.என்.ஏ மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதையடுத்து பல தாய்மார்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

"எனது குழந்தைக்கு மூன்று வயது. அதன் குறும்புகளை ரசிக்கும்போது, இது எங்கள் குழந்தை இல்லையே" என்று உள்ளுக்குள் ஏதோ ஒன்று உறுத்துகின்றது என்று ஒரு தாய் அழுகையுடன் கூறியுள்ளார்.

மழலை இல்லாத தம்பதியர் வாழ்வில் வசந்தம் வீசுவதற்குப் பதிலாக, புயல் அடிக்க வைத்திருக்கின்றன தமிழ்நாடு மருத்துவ மனைகள். "மருத்துவமனை மீது சட்ட நடவடிக்கை எடுக்கலாம் எனப் பொங்குகின்றது மனசு. இதனால், உறவுகள் நண்பர்கள் மட்டத்தில் சந்திக்க நேரிடும் அவமானங்களை எண்ணி அடங்கிப் போகின்றோம்" எனப் பாதிக்கப்பட்ட தம்பதியர் சிலர் கூறுகின்றனர்.

## சிறீலங்கா பந்துல கனடாவில் பந்தாடப்பட்டார்

சிறீலங்கா அரசினது ரொறன்ரோ அலுவலகத்தின் தலைமை அதிகாரி பந்துல ஜெயசேகர என்பவர்.

கனடியத் தமிழருக்குள் பிளவைகளை ஏற்படுத்துவது, இவர்கள் பற்றி கனடிய ஊடகங்கள் ஊடாக அவதூறான பிரசாரங்களை மேற்கொள்வது, தமிழர்கள் அனைவரையும். பயங்கரவாதிகளாகச் சித்தரிப்பது என்பவை இவரது முதன்மைப் பணி.

கடந்த மாதம் யோர்க் பல்கலைக் கழக மாணவரவைக் கூட்டத்தில் இவர் உரையாற்றவிருந்தார். ஆனால் மானமுள்ள தமிழ் மாணவர் அமைப்பு ஒன்று திரண்டெழுந்து எதிர்ப்புத் தெரிவித்து அதனை ரத்தாக்கிவிட்டது. பந்தாடப்பட்ட பந்துல ரொம்பத் துவண்டு போயுள்ளாராம்! சும்மா இருக்கும் தமிழனைச் சொறிந்தால்....... புரியுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பீட்ரூட் கிழங்கிலிருந்து எதனோல்

நோவாஸ்கோஸியாவிலுள்ள Atlantec BioEnergy எனும் கம்பனி, பீட்ரூட் கிழங்கிலிருந்து எதனோல் தயாரிக்க உத்தேசித்துள்ளது. காலங்காலமாக, சோளத்திலிருந்து எதனோல் தயாரிக்கப்பட்டு வந்தது. பரிசோதனை முடிவுகளிலிருந்து, சோளத்திலும் பார்க்க அதிகளவில் சக்தியைக் கொண்டுள்ள பீட்ரூட்டிலிருந்து எதனோல் தயாரிப்பது திறனாக்கம் கூடியதென கண்டறியப்பட்டுள்ளது.

## உடற்பருமனும் ஒருவகை நோயே

ஆர்ஜென்டீனாவின் செனட்டர் சபை, தேசத்தின், அரசாங்க, தனியார் மருத்துவ சுகாதார திட்டங்களின் கீழ், உடற்பருமன், உணவுட்கொள்ளலில் குறைபாடுகள் ஆகிய நோய்களுக்குரிய செலவினங்கள் கொடுக்கப்பட வேண்டுமென்ற சட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. நோயாளர்கள் ஆர்ஜென்டீனாவின் சுகாதார திட்டங்களின் கீழ் தமக்குரிய வைத்தியத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

## மன அழுத்த நோய்க்கு மின்சார வைத்தியம்

ரொறன்ரோ வைத்தியர்கள், கடுமையான மன அழுத்த நோயை, மின்சாரத்தை மூளையின் ஒரு பகுதிக்கு அறுவைச் சிகிச்சை முறை ஒன்றினைப் பயன்படுத்தி பாய்ச்சுவதன் மூலம் குறைக்க அல்லது குணமாக்க முடியும் எனத் தெரிவித்துள்ளனர்.

Biological Psychiatry என்னும் மருத்துவ சஞ்சிகையில் கடந்த மாதம் இதுபற்றிய தகவல்கள் வெளிவந்துள்ளன. மூளையின் ஆழ் பகுதியில் மின்சாரத்தை பயன்படுத்தி தூண்டுதலை ஏற்படுத்துவதன் மூலம் பாதுகாப்பான, பயன்மிக்க முறையில் மிகக் கடுமையான, குணமாக்க முடியாத மன அழுத்த நோயைக் குணமாக்கலாம் எனக் கண்டறிந்துள் ளனர். 20 பேரில் செய்யப்பட்ட பரிசோதனையின் போது 60% ஆனோர் நல்ல பலன் பெற்றுள்ளனர். சத்திரசிகிச்சை நடந்து ஒரு வருடத்தின் பின்பும், 35% ஆனோர், மன அழுத்த நோய் அறிகுறிகள் இல்லாது காணப்படுகிறது.



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

**2009 ஜூன் மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர் அமெரிக்காவுக்கு கடல், தரை, வான் வழியாகச் செல்லும் கனடியர்கள் கனடியக் கடவுச்சீட்டு (Canadian Passport) வைத்திருக்க வேண்டியது கட்டாயம். தற்போதுள்ளது போன்று கனடிய குடியுரிமை அட்டை (citizenship card) இருந்தால் மட்டும் போதாது. எனவே, கனடிய கடவுச்.சீட்டு இல்லாதவர்களை, தாமதத்தை நீக்கும் வகையில் முற்கூட்டியே கடவுச் சீட்டுக்கு விண்ணப்பிக்குமாறு மத்திய அரசு அறிவித்துள்ளது.**

**வங்கிகள் வழங்கும் கடன் அட்டைகளுக்கும் (credit cards) கடவுச்சொல் (pass word) முறையை அறிமுகப்படுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது. விசா, மாஸ்டர் கார்ட் ஆகியவைகள் 2010 ஆண்டில் கடவுச்சொல்லை அமல் செய்யவுள்ளன. அவ்வேளையில், அட்டைகளின் பின்புறத்தில் உரியவரின் கையொப்பம் அவசியமற்றதாக்கப்படும். அதிகரித்து வரும் கடன் அட்டைகள் மோசடியைத் தடுக்க இது உதவுமென எதிர்பார்க்கப்படுகின்றது.**

**கடதாசி அட்டைகளிலான கோப்பி 'கப்'கள், சாப்பாடு பரிமாறப்படும் அட்டைப் பெட்டிகள், பிளாஸ்ரிக் பைகள் போன்றவற்றின் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளை ரொறன்ரோ நகரசபை ஆலோசித்து வருகின்றது. கழிவுப் பொருட்களை வாகனங்களில் ஏற்றும்போது கூடிய இடத்தினை இது பிடிப்பதாலும், சூழல் சுற்றாடலுக்கு மாசு ஏற்படுத்துவதாலும், இதன் பாவனையை ஆகக்குறைந்தது ஐம்பது வீதத்தினால் குறைக்க நகரசபை விரும்புகின்றது.**

**கனடாவில் வீடு விற்பனை விலை கடந்த மூன்று மாதங்களாகச் சரிவு நிலையில் இருப்பதாக Canadian Real Estate Association தெரிவித்துள்ளது. இதனால் வீடு விற்பனை மிகக் குறைந்து வந்துள்ளது. சராசரியாக 5.1 வீதம் விற்பனை விலை வீழ்ச்சி அடைந்துள்ளதாகவும், மேலும் சரியும் நிலை காணப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்குக் கனடாவில் கல்கேரி, எட்மன்டன் ஆகிய நகரங்களில் வீட்டு விலை மேலும் குறையலாமென எதிர்வு கூறப்படுகின்றது.**

**இளம்பராயத்தினர் ஒருவர் பாலியல் உறவு கொள்வதற்கான சம்மத வயதெல்லை 16 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. 1892 ஆண்டிலிருந்து இந்த வயதெல்லை 14 ஆக இருந்து வந்தது. கனடிய மத்திய அரசு அண்மையில் கொண்டுவந்த சட்டத் திருத்தத்தின் பிரகாரம், தற்போது 16 வயதுக்குட்பட்ட ஒருவருடன் அவர் சம்மதம் வழங்கினாலும், பாலியல் ரீதியாக அவருடன் தொடர்பு கொள்வது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும்.**

**16 வயதுக்கும் 21 வயதுக்குமிடைப்பட்ட வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்கள் விடயத்தில் மேலும் சில கெடுபிடி விதிகளை நடைமுறைப்படுத்த ஒன்ராறியோ மாகாண அரசு ஆலோசித்து வருகின்றது. அண்மைக் காலங்களில் வீதி விபத்துகள், இது தொடர்பான மரணங்கள் என்பனவற்றில் இளம் பராய சாரதிகளே அதிகமாகவிருந்தது அவதானிக்கப்பட்டதையடுத்து, இந்த நடவடிக்கை பற்றி ஆராயப்படுவதாக மாகாண போக்குவரத்து அமைச்சு கூறியுள்ளது.**

**உலகின் செல்லிடத் தொலைபேசிப் பாவனையாளர் தொகையில், கனடா முப்பது நாடுகளுக்குப் பின்னால் நிற்பதைப் புள்ளி விபரமொன்று தெரிவிக்கின்றது. கனடியர்களில் 69 வீதமானவர்களே செல்லிடத் தொலைபேசிப் பாவனையாளராகவுள்ளனர். ஆகக்கூடிய தொகையினர் (97 வீதம்) பிரித்தானியர்கள் ஆவர். அமெரிக்கர்களில் 90 வீதத்தினர் செல்லிடத் தொலைபேசிப் பாவனையாளர்கள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொ. கனகசபாபதி
மகாஜன முன்னாள் அதிபர்

# அதிபர் பிரயாணம் - 4

**6. காசிப் பிள்ளைக்குத் தான் நேரசூசி செய்ய முடியுமா?**

தவராஜகுலசூரியர் என்ற ஒரு ஆசிரியர் கலைப்பட்டதாரி. இடமாற்றம் பெற்று வந்தார். உடுவில் அவரது சொந்த ஊர். இதுகாலம் வரை பிறமாநிலங்களில் சேவையாற்றியவர் இப்பொழுது தனது சொந்த ஊருக்கு இடமாற்றம் பெற்று வந்துள்ளார். அவர் படிப்பிப்பதற்கான பாடங்களை ஏனையவர்களிடமிருந்து எடுத்தே கொடுக்க வேண்டும். எடுப்பது சுலபம். பொதுவாகப் பாடசாலகளிலே ஆசிரிய பற்றாக் குறை இருக்கவே செய்யும் . பெரிய பாடசாலைக-ளாக இருந்தால் வசதிக் கட்டணத்தில் ஆசிரியர்களை நியமித்துப் பற்றாக்குறையினை ஈடு செய்வார்கள். மகாஜனாவில் நான் எட்டு ஆசிரியர்கள் வரை வசதிக் கட்டணத்தில் சேவைக்கு அமர்த்தியிருந்தேன். ஏழாலை அரசுப் பாடசாலை. அங்கே வசதிக் கட்டணம் மிகக் குறைந்த அளவிலேயே மாணவர்களிடமிருந்து அறிவிடப்பட்டு வந்தது. ஆகவே பாடசாலையின் ஏனைய செலவினங்களுக்கே வசதிக் கட்டணம் போதுமானதாக இல்லை. ஆசிரிய பற்றாக்குறையினை பாடசாலையில் உள்ள ஆசிரியர்களுக்கு அதிக பாடங்களை ஒதுக்கியேதான் சமாளிக்க வேண்டும். ஆகவே ஒரு புதிய ஆசிரியர் வருகிறார் என்றால் ஆசிரிய குழாத்தினர் அனைவருக்குமே உல்லாசம்தான். யார்யாரிடமிருந்து பாடங்களை எடுக்கலாமெனத் தீர்மானித்து அவருக்கு தரவுள்ள பாடங்கள் பற்றியும் வகுப்புக்கள் பற்றியும் கூறினேன். மறுநாள் நேரசூசி தருவதாக அவரிடம் சொல்லி அவரை ஆசிரிய அறையில் தங்குமாறு பணித்தேன்.

நேரசூசி செய்பவர் திரு காசிப்பிள்ளை அவர்கள். அவர் ஒரு விஞ்ஞானப்பட்டதாரி. அன்று மாலை பாடசாலை முடிவுற்றதும் அவரை அழைத்து நேரசூசியில் மாற்றங்கள் செய்து தருமாறு கேட்டேன். "செய்தாப் போச்சு, எப்போ வேண்டும்' என்றார். 'நாளை' என்றேன். ஒரு மாதிரியாகப் பார்த்து அது முடியாது. நிறைய மாற்றங்கள் செய்ய வேண்டும். ஏன் வார முடிவில் செய்வோமே. திங்கட்கிழமை புதிய நேரசூசி கொடுக்கலாம் தானே என்றார். எனது பதிலை எதிர்பார்க்காமலேயே அவர் வீட்டிற்குச் செல்ல ஆயத்தமாகிவிட்டார்.

மறுநாட்காலை நான் வழமை போன்று காலையில் பாடசாலை சென்றேன். ஆசிரியர்கள் ஒவ்வொருத்தராய் அலுவலகம் வந்து வருகை நேரம் பதிவுப் புத்தகத்தில் பதிந்து விட்டுச் செல்கையில் அவர்களை அழைத்துப் புதிய நேரசூசியை அவர்களிடம் கொடுத்தேன். காசிப்பிள்ளையும் வந்தார். அவரிடம் அவரது நேரசூசியைக் கொடுத்தேன். ஒரு கணம் திகைத்து நின்றவர். இது யார் செய்தது. கட்டாயமாகச் செய்ய வேண்டும் என்று சொல்லியிருந்தீர்கள் என்றால் நான் எடுத்துப் போய் இரவோடிரவாகச் செய்திருப்பேனே என்றார். பரவாயில்லை. எனக்கு எதனையும் பிற்போடுவது பிடிக்காது.கட்டாயப் படுத்துவதும் பிடிக்காது ஆகவே நானே இரவோடிரவாகச் செய்தேன் என்றேன். மகாஜனக் கல்லூரியில் நான் ஆசிரியப் பணி ஆற்றிய பொழுது செய்யாத வேலை இது ஒன்று தான். நான் அங்கு சேர்ந்த காலத்தில் திரு S.B.G வாரியார் எனும் கேரளத்தினைச் சேர்ந்த ஆசிரியரும் அவரைத் தொடர்ந்து திரு சத்தியோசாத ஐயரும் பின்னர் கனராசாவும் நேரசூசி தயாரித்த ஆசிரியர்கள். காசிப்பிள்ளை பிகு பண்ணியது எனக்கு ஒரு சவாலாக அமைந்தது. எனவே வீடு சென்றதும் செய்து பார்த்து விடலாமே எனத் தீர்மானித்து இறங்கினேன். எனது மனைவி அருகிருந்து உதவினார். நான் எக்காரியம் புகினும் நூற்றுக்கு நூற்றிஐம்பது வீதம் உதவும் அரும் குணவதி அவர். இருவரும் அதிகாலை 2:00 மணிவரை உழைத்தோம். வெற்றியும் பெற்றோம். இந்தச் சிறிய செயல் ஆசிரியர்களுக்கு நான் அவர்களிடம் எதனை எதிர்பார்க்கிறேன் என்பதை உணர்த்தியிருக்கும்.

மனோகரனை நான் தண்டித்தது எப்படியாக மாணவர்களுக்கு என்னைப் பற்றிய கணிப்பினை ஏற்படுத்த உதவியதோ அதே போன்று இந்த நேரசூசி அலுவலும் ஆசிரியர்களுக்கு என்னைப் பற்றிய கணிப்பினை ஏற்படுத்துதற்குக் காரணமாயது. பாடசாலை சுமுகமாக ஓடியது. ஆறுமாதம் முடிவுற்றுவிட்டது.

7. **கல்வி டிப்புளோமா ஒரு ஆசிரியருக்கு எந்த விதத்தில் உதவுகிறது?** "A good teacher is a psychologist par exellance" என்பார்கள் கல்வி டிப்புளோமா (Diploma in EducatIon) கற்பதால் ஆசிரியருக்கு எந்தவிதமான பிரயோசனமும் இல்லை என்ற அபிப்பிராயமே எனக்கு நிலவி வந்தது. ஒரு ஆசிரியருக்குத் தேவையானது, கடமை உணர்வு, கற்பித்தல் திறமை, மாணவருக்கு முன்மாதிரியாக அமையக் கூடிய ஆளுமை. இவை ஒன்றினையும் கல்வி டிப்புளோமா கற்பதால் ஆசிரியர் பெறுவதில்லை. ஆகவே நான் டிப்புளோமா கற்பதில் என்றுமே நாட்டம் காட்டியதில்லை. 1963ல் எனக்குத் திருமணம் நடந்தது. எனது மனைவியின் உபத்திரவத்தால் 1964 டிப்புளோமா கற்பதற்காக விண்ணப்பித்திருந்தேன். அக்காலத்தில் எழுத்துப் பரீட்சை இலலை. வெறுமனே நேர்முகப் பரீட்சை தான். மகாஜனாவில் இருந்து எனது நண்பர் திரு பரமேஸ்வரநாதனும் விண்ணப்பித்திருந்தார். ஒக்ரோபர் முதல் வாரத்தில் நேர்முகப் பரிட்சைக்கு வருமாறு அழைத்திருந்தனர். எனது மனைவி முதல் மகனைக் கர்ப்பம் தரித்திருந்தார். பிறக்கும் காலமும் ஒக்ரோபர் முதல் வாரமே. ஆகவே நேர்முகப் பரீட்சைக்குப் போகாமல் தவிர்ப்பதற்கு எனக்கு நல்லதொரு சாட்டுக் கிடைத்தது. எனது சாட்டு மனைவியாருக்கும் நியாயமாகப் பட்டமையால் பிரச்சினை இல்லை. ஆனால் நேர்முகப் பரீட்சையின் போது பரமேஸ்வரநாதனுக்கு முன்னர் எனது பெயர் அழைக்கப் பட்டு நான் போகாமையால் நேர்முகப் பரீட்சை செய்தவர்கள் பரமேஸ்வரநாதனை நோக்கி, 'ஏன் யாழ்ப்பாண புகையிரதம் இன்று தாமதமாக வந்ததா உமது நண்பரைக் காணவில்லையே' என்றார்களாம்.

கடந்த பதினான்கு வருடங்களாக நல்லாசிரியருக்கு ஏது அத்தியாவசியமில்லை என்று சொல்லி வந்தேனோ அது இப்போது அவசியம் எனத் தெரிய வந்தது. கட்டாயம் டிப்புளோமா தேவை என்ற நிலை ஏற்பட்டது. காரணம்? நான் இப்போது ஒரு பாடசாலை அதிபர்.
பாடசாலை அதிபர்கள், கல்வித் திணைக்கள பாடசாலைக் கல்வி சம்பந்தமான அலுவலர்கள் மற்றும் பாடநூல் திணைக்கள அலுவலர்கள், பரீட்சைத் திணைக்கள அலுவலர்கள் யாபேரையும் கொண்ட ஒரு ஒன்றிணைந்த சேவைத்துறை ஆரம்பிக்கப் பட்டது. அதனை ஸ்ரீலங்கா கல்வி நிர்வாக சேவை (S.L.E.A.S- Sri Lanka Educational Administrative Service) என அழைத்தனர்.

S.L.E.A.S விதிகளின்படி இரண்டு தகைமை தடைப் பரீட்சைகள் உள்ளன. ஒன்று கல்வி டிப்புளோமா மற்றையது மூன்று பகுதிகளைக் கொண்டது. இவை நிர்வாகசேவை விதிமுறைகள், அரச சேவை கணக்கியல், சிங்கள மொழித்திறன். இவை மூன்றினையும் ஒரே தடவையில் அல்லது ஒன்றன் பின் ஒன்றாகப் பரீட்சைக்குத் தோற்றிப் பெற்றுக் கொள்ள முடியும். நாலாவது தரத்தில் உள்ளவர் பதவி பெற்ற மூன்று வருடங்களில் டிப்புளோமா பட்டம் பெற வேண்டும். ஐந்து வருட சேவைக்குப் பின்னரே தரம் 4 பதவி உயர்வுக்கு விண்ணப்பிக்கலாம். டிப்புளோமா இல்லாவிட்டால் இரண்டாம் தர அதிபராகவே வாழ்நாள் முழுவதும் வண்டி ஓட்ட வேண்டும். என்ன செய்வது. பதவி ஆசை வென்றது. இது 1971. டிப்புளோமா செல்வதற்கும் எழுத்துப் பரீட்சை வைத்தார்கள். தேர்வு பெற்றேன். நவம்பர் மாதம் முதல் வாரம் வகுப்புகள் ஆரம்பம் என அறிவித்திருந்தார்கள். ஆகவே ஏழாலையில் அதிபர் பணியினை முடிவுக்குக் கொண்டு வந்த அன்று ஒரு ஐந்தாம் தர மாணவி ஓடோடி வந்து என் கையினில் பரிசாக ஒரு (22ம் பக்கம் வருக)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியுயோர்க் ஐ. நா. முற்றத்தில் மகிந்தவின் கொலை முகத்தை அம்பலமாக்கிய வடஅமெரிக்கத் தமிழரின் கண்டனப் பேரணி












நியுயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையில் கடந்த மாதம் 24 திகதி சிறீலங்கா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரையாற்றிக் கொண்டிருந்த வேளையில், அதன் முற்றத்தில் திரண்ட ஆயிரத்துக்கும் அதிகமான கனடா, அமெரிக்காவாழ் தமிழர்கள் அவரது கோரக் கொலை முகத்தை அம்பலப்படுத்தியதுடன், அவரது சிங்கள ஆட்சியில் நடைபெறும் மனித உரிமை மீறல்களையும் துலாம்பரமாக்கினர். அமெரிக்காவிலுள்ள 'இனப்படுகொலைக்கு எதிரான தமிழர்' அமைப்பும், கனடா தமிழ்ப் படைப்பாளிகள் கழகமும் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன, கனடாவிலிருந்து ஏழு சிறப்புப் பேருந்துகளிலும், பல தனியார் மகழுந்துகளிலும், வானூர்தி வழியாகவும் உணர்வாளர்கள் அங்கு சென்றிருந்தனர். சிறுதொகையிலான சிங்களவர் மகிந்தவுக்கு ஆதரவு தெரிவிக்க அங்கு கூடியிருந்தனராயினும், தமிழரின் பலத்தையும் உணர்வையும் கண்டு மெதுவாக அங்கிருந்து அகன்று விட்டனர். வழக்கறிஞர் உருத்திரா விசுவநாதன், மருத்துவர் எலின் சன்டர், எலியாஸ் ஜெயராஜா, வழக்கறிஞர் நாதன் சிறீதரன், வனிதா இராஜேந்திரன், மு. தியாகலிங்கம் உட்படப் பலர் இங்கு உரையாற்றினர். இங்கு சீனாவுக்கு எதிராகத் திரண்டிருந்த திபெத்தியரும், ஈரானுக்கு எதிராகக் கூடியிருந்த இஸ்ரேலியரும் தமிழரின் கண்டனப் பேரணிக்கு தங்கள் ஆதரவைப் பகிரங்கமாக வழங்கினர். (ஒளிப்படங்கள்: கோகுலன்)

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றொறன்ரோவில் சிங்களக் களியாட்டத்தை தோற்கடித்த தமிழ் மகளிரின் உணர்வுபூர்வ கவனயீர்ப்பு








சிறீலங்கா சிங்கள அரசாங்கம் லட்சக்கணக்கான டாலர்களைச் செலவழித்து கடந்த மாதம் 20ஆம் 21ஆம் திகதிகளில் றொறன்ரோ Harbour Front அரங்கினில் களியாட்ட கேளிக்கைகள் உள்ளடங்கிய கலாசார விழாவொன்றினை நடத்தியது. தனது நாட்டில் தனது அரசாங்கம் நடத்திவரும் மனிதப் படுகொலைகள் உட்பட்ட சகல மனித உரிமை மீறல்களையும் மறைப்பதற்காவும் உல்லாசப் பயணிகளைக் கவர்ந்திழுக்கவும் இந்த விழா அதற்குத் தேவைப்பட்டது. ஆனால், சிங்கள அரசின் கபடத்தனத்தை கனடிய மக்களுக்கு எடுத்தியம்பவென, கண்காட்சிக் கலாசார விழா இடம்பெற்ற அரங்க முகப்பில் கனடியத் தமிழ் மகளிர் அமைப்பினர் இரு நாட்களும் கவனயீர்ப்பினை வெற்றிகரமாக நடத்தினர். ஆயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் பதாதைகளையும், மனித உரிமை மீறலை அம்பலப்படுத்தும் ஒளிப்படங்களையும் சுமந்தவாறு இங்கு திரண்டு நின்று அனைவரதும் கவனத்தை வெகுவாக ஈர்ந்தனர். இந்தக் கவன ஈர்ப்புக்கெனத் தயாரிக்கப்பட்ட 'ரீ ஷேர்ட்'டுகளை சில கனடிய வெள்ளையர்கள் கேட்டுப் பெற்று தாமும் அணிந்து நிகழ்வில் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது. (ஒளிப்படங்கள்: பாவலன்)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகலிட மண்ணில் தியாகி திலீபன் நினைவாக ஒரு புது அத்தியாயம்






## வன்னி மக்களின் அவலத் துயர் துடைக்க கனடிய இளந்தமிழர் 30 மணி நேரம் உண்ணாவிரதம்

வன்னியில் ஒரு நேர உணவுக்குக்கூட வழியின்றி அல்லலுறும் உறவுகளின் துயர் துடைக்கவெனக் கனடிய தமிழ் இளையோர் நடத்திய முப்பது மணிநேர உண்ணாவிரதம் றிச்மன்ட்ஹில் இந்து ஆலய சமூக மண்டபத்தில் நடைபெற்றது. தியாகி திலீபனின் 21வது நினைவு நாளான செப்டம்பர் 26 திகதி பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகி, மறுநாளான 27 திகதி இரவு பத்து மணிக்கு இது முடிவுற்றது. மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் அவர்களின் பாரியாரியார் சுகுணம் ஈகைச்சுடர் ஏற்றி வைத்து ஆரம்பித்து வைத்ததுடன் அவரே இறுதியில் உண்ணாவிரதிகளுக்கு பால் வழங்கி முடித்தும் வைத்தார். இந்நிகழ்வின் நோக்கத்தினை நீதன் சண்முகராஜா விளக்கிக்கூற அவரைத் தொடர்ந்து உண்ணாவிரதம் அனுஷ்டித்த பல இளையோரும் தம் மன உணர்வுகளை உரையாக வழங்கியபோது திரண்டிருந்த மக்கள் அவர்களின் மனோதிடத்தையும் இனப்பற்றையும் எண்ணிக் கண்ணீர் மல்கினர். உண்ணாவிரத இறுதி மணித்தியாலங்களில் வானம்பாடிகள் எழுச்சிப்பாடல்களையும் விடுதலைப்பாடல்களையும் வழங்கி நிகழ்வை உற்சாகப்படுத்தினர். கலாநிதி குலமோகன், திரு எஸ். திருச்செல்வம், பொன். பாலராஜன் ஆகியோரின் சிற்றுரைகளுடன் உண்ணாவிரத நிகழ்வு முடிவுற்றபோது, "நாம் களைக்கவில்லை; மீண்டும் உண்ணாவிரதங்களை நடத்துவோம்" என்று ஒரே அணியில் இளையோர் குரல் எழுப்பினர். நிகழ்வின் முடிவு வைபவத்தின் போது எடுக்கப்பட்ட ஒளிப்படங்களை www. kerudavil. com இணையத்தளத்தில் பார்க்கலாம்.

(ஒளிப்படங்கள்: 'கெருடாவில்' காந்தி)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதனையையும் சோதனையையும் சாதனையாக்

## மானம்பாடும் வானம்பாடிகளின் ‘தாய்மடி தாங்











கனடியத் தமிழர் வாழ்வில் ஒரு வரலாற்ற
திகதிகளில் நிகழ்ந்தேறியது. இவ்வாறு
இசைக்குழுவொன்று தொடர்ச்சியாக 27
வழங்கியது ஒன்று. இந்த நிகழ்ச்சியைத்
சேகரிப்புக்காக நடத்தியமை அடுத்தது.
ஒவ்வொருவரும் குறிப்பிட்ட ஒரு தொகை
மேடையேறியமை மற்றையது. இங்கு
நிறுவனத்திடமே கையளிக்கப்பட்டது
அணிசெய்த வேறு சில சிறப்புகளும்
இடம்பெற்ற கனடா கந்தசாமி கோவில்
திரண்டிருந்த மக்கட் கூட்டம்; 27 மணி நே
செல்ல விரும்பாது அவர்கள் அமர்ந்திருந்
பலகாரங்களை ‘திறந்த சமையற்கூட’
சமூகப்பற்றாளர்கள் அதில் சேர்ந்த முழு
கையளித்தது; குரல் தழுதழுக்கக் கண்ணீர்
நகைகளை (ஒருவர் தாலிக்கொடியையே
என்று இவைகளை அடுக்கிக் கொண்டே
களம் அமைத்துக் கொடுத்தவர்கள் தமிழரி
இதன் அமைப்பாளர் நர்த்தனாவையும், வா
வாழ்த்தாத நெஞ்சங்களே இல்லை. பேருக்
மறவாது தாய் மொழி உணர்வோடு
‘வானம்பாடிகள்’ நிகழ்த்திய சாதனை,
வாழும் தாயக உறவுகளுக்கு ‘யாமிருக்க
அளிப்பதாக அமைந்திருந்தது. அற்புதமா
அதனூடாக கனடியத் தமிழரை ஒன்றுப
வாழும் உறவுகளுக்கு உரமாக்கிய வா
என்று ‘தமிழர் தகவல்’ வாழ்த்துகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ாக்கிய கனடியக் கலைஞரின் வரலாற்று அரங்கம்
## ...ங்குவோம்' 27 மணி நேரத் தொடர் இசைமழை





...ாற்றுச் சிறப்பு நிகழ்ச்சி கடந்த மாதம் 20, 21
...ாறு கூறுவதற்குப் பல காரணங்களுண்டு.
... 27 மணித்தியாலங்கள் மேடை நிகழ்ச்சியை
...பத் தாயக உறவுகளின் துயர் துடைக்கும் நிதி
...தது. இந்த நிகழ்ச்சியில் பாடல் இசைத்த
...கையை நிதி சேகரிப்புக்கு வழங்கிய பின்னரே
...ங்கு சேர்ந்த முழுத் தொகையும் 'கெயர்'
... எல்லாவற்றிலும் முக்கியமானது. இதற்கு
...ம் உண்டு. 27 மணித்தியாலமும் நிகழ்ச்சி
...் சமூக மண்டபம் நிரம்பி வழியும் வகையில்
... நேர இசைமழை முடிந்த பின்னரும் எழுந்து
...ிருந்தது; பார்வையாளருக்கு சிற்றுண்டி மற்றும்
...' முறையில் தயாரித்து விற்பனை செய்த
... முழுப்பணத்தையும் 'கெயர்' நிறுவனத்திடமே
...ணீர் விட்டவாறு பல பெண்கள் தங்களின் தங்க
...யே வழங்கினார்) அன்பளிப்பாகக் கொடுத்தது
...ண்டே போகலாம். இத்துணை சிறப்புகளுக்கும்
...மிழரின் மானம்பாடி வருகின்ற 'வானம்பாடிகள்'.
..., வாத்திய-பாடல் கலைஞர்களையும் பாராட்டி
...ருக்கும் புகழுக்குமாக அன்றி, தாய் மண்ணை
...ு தமிழ்த்தாயின் உத்தமக் குழந்தைகளாக
..., வேதனைகளைச் சுமந்து சோதனையுடன்
...ருக்கப் பயம் வேண்டாம்' என அபயக்குரல்
...தமான 27 மணிநேர இசைமழை வழங்கி,
...ப... உணர வைத்து, அதனையே மண்ணில்
...ானம்பாடிகளை "வாழ்க! வளர்க நும்பணி!"
...ு. (ஒளிப்படங்கள்: கோகுலன்)














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இது உங்களுக்கு...!



வீடு வாங்கும் போதோ அல்லது விற்கும் போதோ
இந்த சன்மானம் உங்களுக்கு உறுதியாகிறது!
(நேரடியாக தொடர்பு கொள்பவர்களுக்கு மாத்திரமே)

HomeLife Higher Standards

**HomeLife/ Future Realty Inc.**
Realtor Member
262 Markham Road
Scarborough, ON M1J 3C5





# பெற்றோர் அறிய வேண்டியவையும் மாணவர் பிரச்சனைகளும் - நூல் வெளியீடு



இலங்கையில் ஆசிரியராகவும் கல்வி அதிகாரியாகவும் பணியாற்றிய கலாநிதி எஸ். சிவநாயகமூர்த்தி அவர்களின் 'பெற்றோர் அறிய வேண்டியவையும் மாணவர் பிரச்சனைகளும்' என்னும் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீடு கடந்த மாதம் ஸ்காபரோ கந்தசாமி கோவில் மண்டபத்தில் நடைபெற்றது. விழாவில் பல்துறைப் பிரமுகர்களும் கலந்து உரையாற்றினர். இந்நூல் மொத்தம் 19 கட்டுரைகளை உள்ளடக்கியது. இவற்றுள் சில ஏற்கனவே தமிழர் தகவலில் வெளிவந்தவை. வெளியீட்டு வைபவத்தின்போது எடுக்கப்பட்ட சில படங்கள் இப்பக்கத்தில் (ஒளிப்படங்கள்: கமலன் கமலலிங்கம்).

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்ணின் பொழுது - 7

சிவாஜினி பாலராஜன்

## சித்திரமும் கைப்பழக்கம்..

கலை வடிவங்கள் அவை சார்ந்த சமூகத்தின் மனப்பாங்கைப் பிரதிபலிப்பதாகச் சொல்லப்படுகின்றது. கவிதை, நாடகம், ஓவியம் சிற்பம் என புராதன வரலாற்றைக் கூறி நிற்கும் கலை வடிவங்கள் அனைத்திலும் அக்காலகட்டத்தின் சமூக வாழ்வு சிறப்பாக சித்தரிக்கப்பட்டதாகத் தெரிகிறது. அத்துடன் உலகத்துப் பெருங்கலைப் படைப்புகள் அனைத்தும் ஏதோ ஒரு வகையில் சமயச் செல்வாக்கிற்கு உட்பட்டிருப்பதாயும் கருதப்படுகின்றது. அஜந்தா ஓவியங்களில் புத்த சமயச் செல்வாக்கும், இத்தாலிய ஸ்பானிய ஓவியங்களில் கிறிஸ்தவ சமயச் செல்வாக்கும், இராஜஸ்தானிய ஓவியங்களில் வைஷ்ணவ சமயச் செல்வாக்கும், தமிழ்நாட்டிலுள்ள ஓவியங்களில் சைவசமயச் செல்வாக்கும் ஓங்கி இருப்பதாகச் சொல்லப்படுகின்றது.

ஒருவர் தன்னுடைய கோணத்திலிருந்து, தான் உள்வாங்கியவற்றிலிருந்து தனக்குள் கிளர்ந்தெழும் அக உணர்வுகளை பல்வேறு வடிகளில் வெளிப்படுத்த முயல்கிறார். அது கவிதை, கட்டுரை, சிற்பம், ஓவியம் என நீண்டு விரிகிறது. இவ்வாறு வெளிவரும் படைப்புகள் ஒரு நோக்கத்தை நிறைவு செய்யும் வகையிலும், படைப்பாளிகளின் விருப்பத்தை உள்ளடக்கும் வகையிலும் அடையாளப்படுத்தப்படுகின்றன. இவற்றில் எழுத்துக்களின் வலிமையை விட, ஓவியம் சிற்பம் என்பவற்றைப் படைக்கும் திறன் மக்களின் கவனத்தை கூடுதலாக ஈர்க்கின்றது. ஏனெனில் பார்வைக்கு வைக்கப்படும் ஓவியங்களைக் காணும் மனித உள்ளங்களில் ஓர் ஈர்ப்புத் தன்மை மேலோங்கி நிலைநிற்கின்றது.

ஓர் ஓவியத்தை வரைவதற்கு இரண்டு மிக முக்கியமான செயன்முறைகளான வரைதல், தீட்டல் என்பவற்றைக் கையாள வேண்டும். வரைதல் என்பது பலவகையான வரைதலுக்குரிய மூலப் பொருட்களைப் பாவித்து இருபரிமாணப் படங்களை அல்லது ஓவியங்களை வரைவது. பொதுவாக வரைதலில் காரீய எழுதுகோல் (graphite pencil), பேனை, மை, வண்ணக் கோல் (crayon), கரிக்கோல் (charcoal), சுண்ணக்கோல் (chalk), வண்ணப்பசை (pastel), திரிக்கோல் (marker), வண்ணக்கலவை (paint) போன்றவற்றைப் பாவித்து கடதாசி, துணி, மரம், கண்ணாடி போன்ற ஊடகங்களில் வரைபவரின் உள்ளக் கருத்துக்கள் சித்தரிக்கப்படும். ஓவியக்கலை பல்வேறு காலகட்ட நிகழ்வுகளை உள்வாங்குவதற்கும், ஆவணப்படுத்துவதற்கும், வெளிப்படுத்துவதற்கும் உகந்தது. ஓவியங்கள் ஒரு பொருளைப் போன்று அல்லது நிழற்படங்களைப் போன்று அல்லது ஒரு கருத்துருவத்தைக் கொண்டு வரையப்படலாம். அதுமட்டுமல்ல ஒரு விடயத்தை விளக்கும் உள்ளடக்கம் கொண்டவையாக, உணர்ச்சி பூர்வமான அரசியல் சார்ந்தவையாகவும் அமையலாம். புகழேந்தி, ஜீவன், மார்க் போன்றவர்களின் ஓவியங்கள் அத்தகையவை.

ஓவியங்கள் (1) புனையா ஓவியங்கள், அதாவது கோட்டினால் வரைந்த வண்ணம் தீட்டப்படாத ஓவியங்கள். (2) புனைந்த ஓவியங்கள், அதாவது வண்ணங்களால் தீட்டிய ஓவியங்கள் என்று இருவகைப்படும்.

புனையா ஓவியங்கள் பொதுவாக வரைதலைக் கருதும். வகுப்புக்குச் சென்றுதான் வரையக் கற்க வேண்டும் என்பதில்லை. வரைய ஆசைப்பட்டாலே ஓரளவு வரையலாம். அப்புறம் வரைதல் நுணுக்கங்களை அறிவதற்கு இருக்கவே இருக்கிறது இணையத்தளம்' சில இணையத் தளங்களில் வரைதலைப் படிப்படியாக, கட்டம் கட்டமாக. விபரித்திருக்கிறார்கள். மாநகராட்சி மன்றங்கள் வரைதல் வகுப்புக்களை நடத்தி வருகின்றன. சிறியோர்க்கும், பெரியோர்க்கும் புறம்பான வரைதல் வகுப்புகள் உண்டு. இந்தக் கலை விடயங்களை நான் கற்றுக்கொள்ள எனக்கு மிகவும் உறுதுணையாக இருந்தது இணையத்தளம் என்று சொன்னால் மிகையாகாது. இணையத்தளத்தில் YouTube என்பதனூடாகவே நான் பலவற்றைக் கற்றிருக்கிறேன். நீங்களும் முயற்சி செய்து பாருங்கள். இணையத்தள முகவரிகளை இக்கட்டுரையின் அடியில் பொறித்துள்ளேன்.

அடுத்த இதழில் தொடரும்

HERITAGE Education Funds

**RESP SAVINGS PLAN**

**கல்விச் சேமிப்புத் திட்டம்**

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

**EDUCATION IS A GREAT GIFT FOR YOUR FUTURE GENERATIONS**

உங்கள் பிள்ளைகளின் கல்விக்கான சேமிப்பு உங்கள் எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

**INCOME TAX PREPARATION**

Personal Income Tax

Small Business Income Tax

Computerized Returns

Graphic land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

**416. 841. 1866**
**416. 955. 9303**
E.mail: ganthiy@rogers.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகளை அடிப்பது..

பிள்ளைகளுக்கு நியாயபூர்வமான தண்டனை வழங்குவது நல்லது எனக் கருதும் நண்பர் ஒருவர் கூறினார், "வேறு விதமான சகல கட்டுப்பாடுகள் எல்லாம், உதாரணமாக கதிரையில் தடுத்து வைத்தல், சலுகைகளை ரத்துச் செய்தல் போன்றவை பயனளிக்காவிட்டால் சிறிய அடிகொடுப்பது அவசியமாகிறது." தனது பிள்ளைகள் மீண்டும் மீண்டும் தமது வீட்டுப் பாடங்களைச் செய்யாவிட்டால், பாடசாலையிலோ அல்லது வேறு இடத்திலோ தவறாக நடந்துகொண்டாலோ, பாடசாலையிலோ அல்லது வேறு இடத்திலோ மற்றைய பிள்ளைகளை அச்சுறுத்திப் பயமுறுத்தினாலோ, மேலும் அவர்களது நன்மைக்காக கொடுக்கப்படும் அறிவுறுத்தல்களை மீண்டும் மீண்டும் மீறினாலோ பிள்ளைகளை அடிப்பேன் என ஒப்புக்கொண்டார்.

பிள்ளைகளை அடிப்பதற்கு எதிரான கருத்தைக் கொண்ட வேறு ஒருவர், "சட்டம் சகலருக்கும் சமமானதாக இருக்கவேண்டும். ஒருவரையும் வேறுபடுத்தக்கூடாது. வயதுவந்தவரை அடிப்பதைச் சட்டம் குற்றம் என தடுத்தால் அதே சட்டம் எவ்வாறு வயது குறைந்த பிள்ளைகளை அடிப்பது சரி என அனுமதிக்கலாம்? தொட்டிலிலிருந்து பிள்ளைகளுடன் நல்ல சாந்தமான உறவை ஏற்படுத்திக் கொள்ள தவறிவிட்டால் 2 வயதுக்கும் 12 வயதுக்கும் இடைப்பட்ட காலத்தில் பிள்ளைகளின் நடத்தைகளைத் திருத்துவது காலம் கடந்ததாகிவிடும்." எனக் கூறினார்.

கன்வெஸ்ற் நியூஸ் ஏஜன்சியின் செய்திப்படி செனெற்றர் ஹேவியு பயேற் அவார்கள் கூறியுள்ளது, "தொடர்ச்சியாக பிள்ளைகளுக்கு எதிராக வன்முறையில் ஈடுபடுபவர்கள் அவ்வாறான அவர்களின் செயலிலிருந்து பாதுகாக்கப்படமாட்டார்கள் என்ற சமிக்ஜையை காட்டுவது இதன் (மசோதாவின்) நோக்கம். ஒரு பிள்ளையின் கையில் மெதுவாக தட்டும் பெற்றோரை கைதுசெய்வது நோக்கமல்ல. "உடல்ரீதியான (Corporal) தண்டனை பிள்ளைகளுக்கு கொடுப்பதற்கு ஆசிரியர்களோ, தாயோ தந்தையோ அல்லது அவர்கள் சார்பாக பிள்ளைகளைப் பொறுப்பில் வைத்திருப்பவர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்." என அவர் தொடர்ந்து கூறினார்.

கவனத்தில் கொள்ளுங்கள்! பிள்ளைகளுக்கு அடிப்பது நல்லது, அல்லது கெட்டது என்ற எந்த கருத்தை நீங்கள் கொண்டிருந்தாலும், புதிய மசோதா சட்டமாக அமல்படுத்தப்பட்டால், அச் சட்டத்திற்கு யாவரும் பணிந்தே ஆகவேண்டும்.

## அதிபர்..

பார்சல் தந்தது இன்னம் என்நினைவில் பசுமையாக உள்ளது. பூரணசந்திரன், சின்னத்தம்பி, ஜெயராஜா பேன்ற அருமையான நண்பர்கள் பேராதனைப் பல்கலைக் கழகத்திலே கிடைத்தனர். ஆனால் உண்மையைச் சொல்வதானால் டிப்புளோமா நான் எந்தவிதமான ஆசிரியத் தகைமையைக் கூட்டுதற்கு உதவவில்லை என்பது சத்தியமான உண்மை. பேராசிரியர் ஜெயசூரியா அவர்கள் உளவியல் அளவீடு, திருமதி சுவர்ணா ஜெயவீரா மேற்கு நாடுகளின் கல்வி முறை, ரஞ்சித் றுபேறு, ஸ்ரீலங்கா கல்வி முறை, வேலாயுதம் கல்வி நிர்வாகம், திருமதி நைல்ஸ் மற்றும் சந்திரசேகரம் கல்வியல் சமூகவியல், W.A. de சில்வா கல்வி உளவியல் எனப் போதனாசிரியர் பட்டியல். பிரேமதாச உடுகம தான் கல்வி நிர்வாகத்தின் போதனாசிரியராக இருந்தவர். S.L.F.P அரசு 1971ல் பதவிக்கு வந்தமையால் அவர் கல்வி அமைச்சின் நிரந்தர செயலாளராகினார். எனவே அந்த வெற்றிடத்திற்குத் திருவாளர் வேலாயுதம் நியமிக்கப்பட்டார். விரிவுரையாளர்களில் திரு வேலாயுதமும், சந்திரசேகரமும் எனது நண்பர்கள். சந்திரசேகரம் அவர்கள் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய பின்னரே பல்கலைக் கழகத்துக்குச் சென்றார். வேலாயுதம் மகாஜனாவின் பழைய மாணவர். கிறிஸ்தவ கல்லூரியில் BSc பட்டப் படிப்பினை முடித்தவர். ஆனால் விரிவுரையாளர்களாக என்னைக் கவர்ந்தவர்கள் மூன்றே மூன்று பேர்கள் மாத்திரமே. முதலாமவர் கலாநிதி சுவர்ணா ஜெயவீரா. சிறிது கொன்னை என்றாலும் கடகட என அழகாக பன்நாட்டுக் கல்வி முறைமைகளை எடுத்துக் கூறுவார். அவரது மோதாவித்தனம் அவரது உரைகளில் தெரியும். அடுத்து W.A.de சில்வா அவர்கள், கல்வி உளவியல் கற்பித்தார். நிறையவே ஆயத்தம் செய்து வருவதனால் மிகவும் கச்சிதமாக வகுப்புகள் இருக்கும். ஆனால் அடுத்த வகுப்பினில் முதல் வகுப்பினில் சொன்னதை மறந்து விடுவார். மூன்றாமவர் பேராசிரியர் ஜெயசூரியா அவர்கள் உளவியல் அளவீடு எளிமையான முறையில் சுலபமாகக் கற்பித்தார்.

மற்றையோர் பற்றிக் கூறுவதற்கு ஒன்றுமே இல்லை. சந்திரசேகரம் விரிவுரையில் வசனங்கள் ஒவ்வொன்றும் ஒரு மைல் நீளம். எழுவாய் பயனிலை எங்கே உள்ளன என்று கண்டு பிடிப்பதற்கே கஷ்டம். டிப்புளோமா மாணவர்கள் யாபேருமே குடும்பஸ்தர்கள். ஆகவே வார இறுதி நாட்களைக் குடும்பத்துடன் செலவு செய்வதற்கு வகை செய்யும் முறையில் வெள்ளி பிற்பகலும் திங்கள் முற்பகலும் வகுப்புகள் இருக்க மாட்டா. ஆகவே என்னைப் பொறுத்த மட்டில் அந்த ஓராண்டு காலம் சம்பளத்துடனான விடுமுறையாகவே அமைந்தது. (அடுத்த இதழிலும் தொடரும்)

யசோ சின்னத்துரை
கனடிய சட்டத்தரணி

வீடு
காணி
வர்த்தகச் சட்டம்

The Law Offices of
Yaso Sinnadurai
Barrister & Solicitor, Notary Public

Real Estate Law
Residential &
Commercial
Business Law

Tel: 416 265 3456 Fax: 416 265–2770

2100 Ellesmere Road, Suite 202, Scarborough ON M1H 3B7 (Markham & Ellesmere)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*சிந்தனைப் பூக்கள்*
எஸ். பத்மநாதனின் தொடர் 25

# சிட்டுக்களே வாருங்கள்!

அன்பான சிட்டுக்களே!

உங்களுக்கெல்லாம் பாடசாலைகள் தொடங்கிவிட்டன. மிகவும் உற்சாகமாகவே பாடசாலைக்குச் செல்ல ஆரம்பித்து விட்டீர்கள். புதிய நண்பர்கள், புதிய ஆசிரியர்கள் எல்லாமே குதூகலம் தான்! எனினும், மாமா அண்மையில் ஒரு பாடசாலைக்குச் சென்றிருந்தார். அங்கு அவர் கண்ட காட்சி தான் சற்று வேதனையாக இருந்தது. பல சிட்டுக்கள் செல்லிடத் தொலைபேசியைப் பாவித்து கதைத்துக் கொண்டிருந்தார்கள். மெதுவாக ஒரு சிட்டுவிடம் கதையைக் கொடுத்தார் மாமா. அதிலிருந்து தெரிந்து கொண்ட விபரங்கள் பல.

பிறந்தநாள் பரிசாக தனக்கு கிடைத்தது இந்த தொலைபேசி, தனது அம்மாவே இதனை வாங்கி வந்தார், தங்கள் வீட்டில் எல்லோரிடமும் செல் தொலைபேசிகள் இருக்கின்றன. தனது அக்கா கமெரா போன் வைத்திருக்கிறார்.. இப்படிப் பல விபரங்கள்.

மொபைல் போன் (Mobile Phone) என்ற கையடக்கமான செலுலர் என்னும் அறைகளுடன் கூடிய பொக்கற்றில் எடுத்துச் செல்லக் கூடிய நேரடியாக டயல் செய்யக் கூடிய ஒரு தொலைபேசி இன்று செல்போன் (Cell Phone) என்று ஆகியுள்ளது. கப்பலில் பாவனையாகி பின்பு இராணுவத் தளங்களுக்கு பரவி தற்போது வானொலி, தொலைநகல் போன்ற எல்லா சேவைகளுக்கும் வந்துள்ளது. தற்போது அனைவரது கைளிலும் இதுவே உள்ளது. இதன் படிமுறை வளர்ச்சியில் அண்மையில் வெளியாகியுள்ளது 3G போன் எனப்படும் கமெரா போன் ஆகும். எல்லா தொலைபேசி கண்டுபிடிப்புகளும் சிட்டுக்களின் படிப்புக்கு எந்த வகையிலும் பெரிதும் பயன்படாது. ஆனால் அவர்களிடையே இந்த போன்களே தாராளமாக புழங்குகின்றன.

அன்பான சிட்டுக்களே! “நீயில்லாமல் நானில்லை” என்பது போல் செல்லிட தொலைபேசி இல்லாமல் நாங்கள் இல்லை என்று சிட்டுக்களாகிய நீங்கள் சொல்வது போலுள்ளது. செல்லிட தொலைபேசி இல்லாது நீங்கள் பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது போல் தெரிகிறது. உங்களுக்கு இதனால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை மாமா கூறுகின்றார். அதிகமான பணச் செலவு, தேவையற்ற தொடர்புகள், ஒரே பழக்கத்திற்கு அடிமையாதல், கேட்கும் சக்தி குறைவடைதல், படிப்பு தவிர்ந்த வேறு விடயங்களில் கவனம் செல்லுதல், புதுப்புது மாதிரி தொலைபேசிகளை வாங்குதல், அடிக்கடி தொலைந்து விடுதல் இப்படிப் பல. அத்துடன் கமெரா போன் உள்ளவர்களிடம் வேறு வகையான ஆபத்துகள் உள்ளன. பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாதல்; பூங்கா, பாடசாலை, வர்த்தக நிலையங்கள், தெருவோரம் எங்கும் பாவிக்கப்படுதல், தேவையற்ற படங்களை எடுத்தல் என்பன. இந்த வகை போன்களால் பெரும் ஆபத்துக்களே நிகழ உள்ளன.

சிட்டுக்களே! நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்? என்பதனை அறிய மட்டும் உதவக் கூடிய இந்த போன்கள் தவிர்க்க முடியாத கட்டத்தில் மட்டும் பயன்பட முடியும். எனவே பாடம் படிக்கும் வேளையில் பயன்படுத்தாதீர்கள், பெற்றோரை அழைக்க மட்டுமே பாவியுங்கள். உங்கள் பெற்றோரின் பெயரிலேயே வாங்குங்கள், வீட்டுக்கு சென்றதும் பொதுவான இடமொன்றில் வையுங்கள், வீட்டில் உள்ள வேளைகளில் உங்கள் வீட்டுத் தொலைபேசியை பாவியுங்கள், புதுப்புது போன்களை வாங்க எண்ணாதீர்கள், விளம்பரங்களைக் கண்டு ஏமாந்து விடாதீர்கள்.

ஆச்சரியத்துடன் ஆபத்துக்களையும் கூடவே கொண்டு வரும் செல்லிட தொலைபேசியையும், கமெரா போனையும் பாவித்து உங்கள் தூக்கத்தினை கெடுத்து விடாதீர்கள்; குற்றச் செயலுக்கு உள்ளாகி விடாதீர்கள். மற்றவர்களைப் பார்த்து செயல்படுவதனை நிறுத்தி படிப்பில் கவனத்தைச் செலுத்துங்கள்.

மீண்டும் சந்திப்பேன்....

The Law office of
**GARY**
**Anandasangaree**

**416 321 1100**

**Gary Anandasangaree**
Barrister and Solicitor

10 Milner Busines Court
Suite: 210
Toronto, ON. M1B 3C6

Phone: 416 321 1100
Fax: 416 321 1107
gary@galaw.ca

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்

* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங் செய்தல், 'இம்பிளான்ற்'
சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட
அனுபவமுள்ள டும்ப பல் வைத்தியர்.

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

2466 Eglinton Avenue East, Unit:7
Scarborough, Ontario. MIK 5J8
Monday to Saturday
Near Kennedy Subway (Rainbow VillageBuilding)

**(416) 266 5161**

**Main Square Dental Office**

7-2575 Danforth Avenue
Toronto, Ontario. M4C 1L5

Dr. Shan - Tuesday (morning)
Dr. Yao San (Tue, Fri & Sat
Dr. Brian (monday)
Dr. May (wednesday)

**(416) 690 0121**



**EARLY CHILDCARE ASST. (ECA)**
100% Guarantied Co-op placement
**JOB OPPORTUNITIES**
- Child Care Assistant
- Child Care Worker
- Day Care Worker / Teacher
- Preschool Worker
- Infant Day Care Worker

**COMPUTERIZED ACCOUNTING**
**JOB OPPORTUNITIES**
- Accounting Assistant
- Accounts Manager
- Accounts payable clerk
- Accounts Receivable Clerk
- Payroll clerk

**PERSONAL SUPPORT WORKER (PSW)**
100% Guarantied Co-op placement
**JOB OPPORTUNITIES**
- Personal Support Worker
- Home Support Worker
- Personal Care Attendant
- Resident Care Aid
- Nursing Assistant

**MEDICAL OFFICE ADMIN (MOA)**
**JOB OPPORTUNITIES**
- Medical Office Assistant
- Medical Admin. Asst.
- Medical Receptionist
- Medical Secretary
- Hospital Ward / Unit Clerk

**BUSINESS ADMINISTRATION**
**JOB OPPORTUNITIES**
- Administrative Assistant
- Office Assistant
- Office Administrator
- Management Trainee
- Executive Assistant

**NETWORK ENGINEERING**
**JOB OPPORTUNITIES**
- Network Administrators
- Systems Administrators
- Technical Support Specialists
- Helpdesk Support
- LAN Administrators

*Shaping careers for over 15 years*

*Changing your life begins with us.....*

*Week-ends & Evening Courses*
Canadian Security Courses,
QA / Software Testing, AccPac, Quick books, Ms Office,
Visual Basic, C++, Visual C#, .Net, A+, MCP, MCSE, CCNA

**Financial Assistance**
Financial Assistance may be available for those who qualify.
**We welcome:**
- ☐ Social Assistance receipients
- ☐ EI - currently receiving / received receipients
- ☐ Maternity benefits received receipients

# Computek College

**BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY**

**Kennedy / Sheppard**
(North-East Corner)
**Tel: 416-321-9911**
2347, Kennedy Road, Suite 301
Scarborough, ON., M1T 3T8

**Kennedy / Eglinton**
N/W Corner, Above Liberary
**Tel : 426.285.9941**
2390 Eglinton Ave East, Suite 248
Scarborough ON.,M1K2P5




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OCTOBER 2008

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | இந்த செவ்வாய்க்கிழமை, வாக்களியுங்கள். | | | | |

**கூட்டமைப்புப் பொதுத் தேர்தல் அக்டோபர் 14, 2008 அன்று நடைபெறவுள்ளது.**



**எங்கு, எப்போது வாக்களிக்கவேண்டும் என்ற தகவல்களுக்கு, உங்களுடைய வாக்காளர் தகவல் அட்டையை சரிபார்க்கவும்.**
அந்த அட்டை எங்கு, எப்போது வாக்களிக்கவேண்டும் என்ற தகவலை உங்களுக்கு விவரிக்கும். அட்டை உங்களிடம் இருந்தால் உங்களுடைய வாக்களிக்கும் நடைமுறைகள் விரைவாகப் பூர்த்தியடையும்.

உங்களுடைய வாக்காளர் தகவல் அட்டையிலோ அல்லது **www.elections.ca** எனும் இணையதளத்தின் "வாக்காளர் தகவல் சேவை" ("Voter Information Service") பகுதியிலோ **நீங்கள் உங்கள் வாக்குச் சாவடியின் வாக்குப் பதிவு நேரத்தைக் காணலாம்.**

**உங்களுக்கு இந்த அட்டை கிடைக்கவில்லை யென்றால்,** வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயர் இல்லாதிருக்கலாம். பதிவு செய்வேண்டுமென்றால், வாக்களிக்கும் தினத்தன்று வாக்குச் சாவடிக்குச் சென்று உங்களுடைய அடையாளத்தையும், முகவரி விவரங்களையும் நிரூபித்தால் மட்டுமே போதுமானதாகும்.

## வாக்களிக்க வேண்டிய புதிய அடையாள அட்டை விதிகள்

வாக்களிக்கும்போது உங்களுடைய அடையாள விவரங்கள் மற்றும் உங்கள் முகவரியை உறுதிபடுத்த வேண்டும்.

கனடாவின் தலைமை தேர்தல் அதிகாரி (Chief Electoral Officer of Canada) அங்கீகரித்துள்ள அடையாள அட்டைகள் பற்றிய விவரங்களுக்கு Elections Canada அதிகாரியிடமிருந்து தபால் மூலம் பெறப்பட்ட கையேட்டின் பின்புறத்தைக் காணுங்கள். அல்லது **www.elections.ca** இணையதளத்தில் "தேர்தலின்போது தேவையான வாக்காளர் அடையாள அவணங்கள்" ("Voter Identification at the Polls") எனும் பகுதியைத் தொடர்புகொள்ளவும்.

வாக்களிக்க நீங்கள் கட்டாயமாக:

- ஒரு கனடா நாட்டு பிரஜையாக இருக்க வேண்டும்
- தேர்தல் தினத்தன்று, குறைந்தது 18 வயதுடையவராக இருக்க வேண்டும்
- **அடையாள விவரங்கள் மற்றும் உங்கள் முகவரியை உறுதிபடுத்த வேண்டும்**

**வாக்களியுங்கள். உங்கள் உலகை வடிவமையுங்கள்.**

**www.elections.ca**


**1-800-INFO-VOTE**
**1-800-463-6868**
கனடா மற்றும் அமெரிக்க குடியரசில், கட்டணமற்ற சேவை 001-800-514-6868 மெக்சிகோவில் கட்டணமற்ற சேவை

**TTY 1-800-361-8935**
சத்தமாக காது கேளாதவர்களுக்கோ அல்லது கேட்கும் திறன் குறைவுள்ளவர்களுக்கு கனடா மற்றும் அமெரிக்க குடியரசில் கட்டணமற்ற சேவை அல்லது உலகின் மற்ற பாகத்திலிருந்து 613-991-2062 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளவேண்டும்

Elections Canada

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sabesan's Choice!



விருது பெற்ற தொழிற்றுறை நிபுணர்

வீடு திருத்தம்
மற்றும் நிலக் கம்பளம்
பொருத்தும் வேலைகளில்
தன்னிகரற்றவர்!

சபேசன்

ஒருமுறை
தொடர்பு கொண்டால்
பலன் புரியும்!


416 605 1990

# சிறீசத்ய சாயி ஆன்மீகக் கல்வி பாலவிகாஷ் மாணவர் ஒன்றிணைந்து வழங்கிய கலை விழா



மார்க்கம் அன்ட் எக்லிங்டன் சாயி நிலைய பாலவிகாஸ் மாணவர்களின் முதலாவது ஆண்டு விழாக் கொண்டாட்டம் கடந்த மாதம் 20 திகதி கனா சிறீ ஐயப்பன் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. கனடாவிலுள்ள சிறீசத்ய சாயி ஆன்மீகக் கல்வி பாலவிகாஷ் மாணவர் ஒன்றிணைந்து முதன்முறையாக இக்கலைவிழாவை எழுச்சியுறச் செய்தனர். பாடல்கள், அழகிய நடனங்கள், குறுநாடகங்கள் எனப் பல நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இதன் சில காட்சிகளை இங்கு காணலாம்.













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நக்கீரன்
தலைவர் - தமிழ்ப் படைப்பாளிகள் கழகம்

# என்றுமுள்ள செந்தமிழ் - 16

**சாதி, மத, பேதமற்ற சங்க காலம்**

தமிழர் வரலாற்றில் சங்க காலமே அவர்களது பொற்காலம் என ஆணித்தரமாகச் சொல்லி வருகிறோம். அது வெறும் புகழ்ச்சி அல்ல. காரணம் சங்க காலத்தில் தமிழ்மக்களை தமிழ்மன்னர்களே ஆண்டார்கள். சாதி பேதம் இருக்கவில்லை. மதவேற்றுமை பாராட்டப்படவில்லை. பால் அடிப்படையிலும் வேற்றுமை இருக்கவில்லை.

கல்வி ஆண், பெண் இருபாலாருக்கும் வாய்த்திருந்தன. பல்வேறு துறையில் புலமை வாய்ந்த புலவர்கள் இருந்தார்கள். இதனை சங்க காலப் புலவர்களின் வரலாற்றில் இருந்து தெரிந்து கொள்ளலாம்.

சங்கப் பாடல்கள் உயர்ந்த இலக்கியத் தகைமை வாய்ந்தவை அவை அன்றைய தமிழ்மக்களின் உயர்ந்த கல்வி அறிவை, பண்பாட்டை விளக்கியன. அவற்றைப் பாடியவர்கள் வரிசையில் அரசாளும் மன்னர்கள் இருந்தார்கள். அந்தணரும் வணிகரும் வேளாண்மக்களும், கணித விற்பன்களும் இருந்தார்கள்.

பிற்காலத்தில் சமூகப் படிக்கட்டில் மிகவும் கீழே தள்ளப்பட்ட குயவர் குலத்தில் புலவர்கள் அதுவும் பெண்பாற் புலவர்கள் இருந்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது மிகவும் வியப்பாக இருக்கிறது.

சங்கப் புலவர்களில் பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், காவல்காரன் காலம் தாழ்த்திக் கொடுத்த நீரை மானம் காரணமாகக் குடியாது வடக்கிருந்து உயிர் நீத்த சேரமான் கணைக்கால் இரும்பொறை, ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், பாண்டியன், பாண்டியன் நெடுஞ்செழியன், சோழன் நற்கிள்ளி, சோழன் குளமுற்றத்துக்கஞ்சிய கிள்ளிவளவன், பெருங்கடுங்கோ, பாண்டியன் அறிவுடை நம்பி, இளம்பெருவழுதி ஆதிமந்தியார் பெருங்கோப்பெண்டு, பாரிமகளிர் போன்றோர் அரச குலத்தவர் ஆவர்.

உறையூர் ஏணிச்சேரி முடமோசியார், கடியலூர் உருத்திரங்க் கண்ணனார், கபிலர் போன்றோர் அந்தணர்கள் ஆவர்.

மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார், மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் போன்றோர் வணிகப் பெருமக்கள் ஆவர்.

அரிசில்கிழார், ஆவூர்கிழார் போன்றோர் வேளாண் மக்களாவர்.

அவ்வையார் மற்றும் இளவெயினி குறவர் குடியில் பிறந்தவர். வெண்ணிக்குயத்தியார் குயவர் குடியில் பிறந்தவர்.

எட்டுத்தொகைப் பாடல்களின் மொத்த எண்ணிக்கை 2426 ஆகும். அவற்றைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 552 ஆகும். இவர்களில் 50 க்கும் மேற்பட்டவர்கள் பெண்பால் புலவர்கள் ஆவர். சில புலவர்களது இயற்பெயர் தெரியவில்லை. அவர்கள், அவர்கள் பாடிய பாடலின் சொல்லாட்சியைக் கொண்டு சுட்டப்படுகிறார்கள்.

எடுத்துக்காட்டாகக் குறுந்தொகை (40) பாடலைப் பாடிய புலவர் பெயர் தெரியாததால் குறுந்தொகையைத் தொகுத்தவர்கள் அந்தப் பாடலில் காணப்படும் சொல்லாட்சியைக் கொண்டு **செம்புலப்பெயநீரார்** என அழைக்கப்பட்டார். அந்தப் பொருள் பொதிந்த அழகான பாடல் இது.

யாயும் ஞாயும் யாரோ கியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்'
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே.

எட்டுத்தொகை நூல்களான அகநானூறு, புறநானூறுப் பாடல்களை 210 புலவர்கள் பாடியுள்ளார்கள்.

குறுந்தொகை பாடிய புலவர்கள் 203, நற்றிணை பாடிய புலவர்கள் 158, புறநானூறு பாடிய புலவர்கள் 157 ஆவர்.

பத்துப்பாட்டுப் பாடல்களை பாடிய புலவர்களின் எண்ணிக்கை ஒன்பது ஆகும். திருமுருகாற்றுப்படை மற்றும் நெடுநல்வாடை இரண்டையும் நக்கீரரே பாடியிருக்கிறார். பொருநராற்றுப்படை பாடியவர் முடத்தாமக் கண்ணியார் என்ற பெண் புலவர். பாடல்களின் அடியளவு 3548 ஆகும். வரியளவு 8552 ஆகும்.

மலையில் வாழ்ந்த குறமகள் இளவெயினியும் மட்பாண்டம் செய்யும் குயமகள் வெண்ணிக்குயத்தியும் பாண்டியன் தமிழ்க் கழகத்தில் புறநானூறு பாடிய புலவர்களாக வீற்றிருக்க முடிந்தது என்றால் அது கல்லூரிக் கல்வியாலா அல்லது திண்ணைப் பள்ளிக் கூட மேம்போக்கு எழுத்தறிவாலா என்று எண்ண வேண்டியுள்ளது. முதலில் தாம் பிறந்த ஊரில் உள்ள புலவரிடம் கல்வி கற்று பின்னர் மதுரை சென்று அங்குள்ள சிறந்த புலவர்களில் ஒருவரிடம் பாடம் கற்றார்கள் எனத் தெரிகிறது.

தொல்காப்பியம் தலைவன் தலைவியைப் பிரிதற்கான காரணங்களைக் கூறுகிறது.

கல்வி கற்பதற்காகப் பிரிதல், தூது செல்வதற்காகப் பிரிதல், பகையின் காரணமாகப் பிரிதல், பொருள் ஈட்டுவதற்காகப் பிரிதல் என்பதே நால்வகைப் பிரிவாகும்.

"ஓதல், பகையே, தூது இவை பிரிவே"

(தொல்காப்பியம் ஃ பொருளதிகாரம் - பிரிவு வகை - எண் 973)

"கல்வி கற்பதற்காகப் பிரிதல், பகை காரணமாகப் பிரிதல், தூது செல்லுதற்காகப் பிரிதல் ஆகிய இவை பிரிவின் வகைகளாகும்"

"பொருள் வயின் பிரிதலும் அவர்வயின் உரித்தே"

(தொல்காப்பியம் ஃ பொருளதிகாரம் - பிரிவு வகை - எண் 981)


"பொருள் ஈட்டுவதற்காகப் பிரியும் பிரிவு எல்லா மக்களுக்கும் உரியது"

நினைத்துப் பார்க்கவேண்டும். பாரத இராமாயணக் காலங்களில் கல்வியறிவு பொது மக்களுக்குத் தடை செய்யப் பட்டது. பெண்பால் புலவர்களின் பெயர்கள் சில கீழே கொடுககப்பட்டுள்ளன.

→



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## என்றுமுள்ள செந்தமிழ்..

1. அள்ளூர் நன்முல்லை
2. அவ்வையார்
3. நல்வெள்ளியார்
4. போந்தை பசலையார்
5. வெள்ளிவீதியார்
6. காக்கைபாடினியார் நச்செள்ளையார்
7. ஒக்கூர் மாசாத்தியார்
8. குற மகள் இளவெயினியார்
9. காவற்பெண்டு
10. பூதபாண்டியன் மனைவி கோப்பெரும்பெண்டு
11 தாயங்கண்ணியார்
12 பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார்
13. நெட்டிமையார்
14. வெண்ணிக்குயத்தியார்
15. வெறிபாடிய காமக்கண்ணியார்
16. மாறோக்கத்து நப்பசலையார்
17. மாற்பித்தியார்
18 கழார் கீரன் எயிற்றியார்
19. குமுழி ஞாழல் நப்பசைலயார்
20 .பேயனார்
21. முள்ளியூர் பூதியார்
22. அச்சியத்தை மகள் நாகையார்
23. பாரிமகளிர்
24. குட புலவியனார்
25. பூங்கண் உத்திரையார்
26, பேரெயின் முறுவலார்
27. கள்ளில் ஆத்திரையனார்
28. கூகைக்கோழியார்
29, பொன்முடியார்
30, பொத்தியார்

பிற்காலத்தில் சங்க காலத்தில் வழக்கத்தில் இருந்த தூய தமிழ்ப்பெயர்கள் சமற்கிருதப்பட்டன. இப்போது என்ன மொழி என்றே புரியாதவாறு பெற்றோர்கள் தங்கள் செல்லப் பிள்ளைகளுக்கு ஆசா, கோசா, யுரேனியா, டில்ஷன், டில்ஷி, கஜானி, கரிசன், அச்சே, அனுஷன், அனு ஷி, விதுஷன், விதுஷி, நிரோஜன், நிரோஜி எனத் தாறுமாறாகப் பெயர் சூட்டுகிறார்கள். தமிழ்மொழிப் பற்றின்மையும் தமிழின உணர்வின்மையுமே இந்த ஜ,ஷ போன்ற கிரந்த எழுத்துக்கள் மீதான மோகமாகும். (வளரும்)

---

# It is now..

The diaspora has to first fight against such indiscriminate vilification and insult if it really exists in any universities or governments. But it is a lame excuse, showing only the lack of guts with the intellectuals to voice for justice with establishments, commented a participant behind the lines.

It seems at the moment there are nearly 20,000 Sri Lankan refugees, predominantly Tamils are living in Malaysia. Most of them are provided with UNHCR identity cards. But there is no provision for their livelihood as they can't officially work. Many youngsters live in trying conditions and are being exploited for labour for meager or no payment at all. They ruin their prime youth for years now.

The Federation of Malaysian Sri Lankan Organisations (FOMSO) could have taken care of educating these youngsters or training them in vocational fields as a token of its grand plans for the diaspora, commented a conference delegate from the West after talking to a few of the UNHCR refugees.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். காந்தி 25

# வெள்ளிப் பணம் - டாலர்

வெள்ளிப்பணத் தொடரில் இம்முறை நாம் சர்வதேசமயமாக்கப்பட்ட பொருளாதாரம் பற்றிப் பார்ப்போம் ஆங்கிலத்தில் (Globalization) எனக் கூறுவார்கள். நாடுகளுக்கிடையிலான வியாபாரங்கள் தங்கு தடையின்றி நடைபெறுவதற்கு தற்பொழுதுள்ள தொழில்நுட்பங்களும் தொலைத்தொடர்பு சாதனங்களும் பெரும் உதவி புரிகின்றன. சர்வதேச ரீதியாக நாடுகளுக்கிடையிலான பொருட்கள் சேவைகள், பணமாற்று செயல்பாடுகள், கலாசார பரிமாற்றங்கள் ஆரம்ப காலத்தில் இருந்து வந்தாலும் தற்பொழுது இதன் முக்கியத்துவம் அதிகமாக காணப்படுகின்றது. இன்று அமெரிக்காவின் பொருளாதார மந்தபோக்கு கனடாவினையும் பாதிக்கும் நிலைக்கு வந்துள்ளது இதற்கு எடுத்துக்காட்டாகும். ஆரம்ப காலத்தில் ஐரோப்பிய நாடுகளான பிரித்தானியா, பிரான்ஸ், ஸ்பெயின், நெதர்லாந்து போர்த்துக்கல் போன்ற நாடுகள் பல ஆபிரிக்க, ஆசிய, தென் அமெரிக்க நாடுகளை தமது காலணித்துவ ஆட்சிக்குள் வைத்திருந்தபோது, ஒரு வேறுபட்ட வகையிலான சர்வதேச வர்த்தகம் காணப்பட்டதாகவும் தற்பொழுது அது வேறு பரிமாணத்தினை அடைந்திருப்பதாவும் கூறப்படுகின்றது.

உலகமயமாகப்பட்ட பொருளாதார நடைவடிக்கையில் முக்கிய அம்சமாக சுதந்திர வர்த்தகம் (Free Trade) என்பது முக்கிய விடயமாக உள்ளது. நாடுகளுக்கிடையிலான வர்த்தகத்தினை மேம்படுத்திக்கொள்ளும் நோக்குடன் வரிவிலக்கு, மற்றும் ஏனை கட்டுப்பாடுகளை நீக்கி சுதந்திரமாக பொருட்கள், சேவைகள், பணக்கொடுப்பனவுகள் பரிமாறிக்கொள்ள வழிசெய்வதாகும். உதாரணத்துக்கு கனடா அமெரிக்கா மெக்சிக்கோ வர்த்தக உடன்பாட்டினை எடுத்துக்காட்டலாம்.

இந்த பொருளாதார ஒருங்கமைப்பில் அரசு என்னும் இயந்திரம் குறைந்தளவு கட்டுப்பாட்டினை சர்வதேச வர்த்தகத்தில் கொண்டிருக்கும் போது அதனை "சுதந்திரமான சந்தை" (Free Market) என அழைப்பர்.


நாடுகளுக்கிடையிலான சர்வதேச கூட்டுறவும் இதற்குள் உள்ளடக்கப்படுகின்றது உதாரணத்துக்கு ஐரோப்பிய யூனியனை (European Union) குறிப்பிடலாம்.

நாடுகளுக்கு இடையிலான சர்வதேச எல்லைகளை உடைத்துக் கொண்டு இந்த உலகமயமாக்கல் செயல்படுகின்றது. இதற்கு பெரும் உறுதுணையாக இருப்பது வானொலி, தொலைக்காட்சி, இணையத்தளங்கள் திரைப்படங்கள் என்பவற்றினை குறிப்பிடலாம், இன்று தமிழ் நாட்டில் கோடிக்கணக்கில் நிதி முதலீடு செய்து திரைப்படங்களை உருவாக்குவதே புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் ஐரோப்பிய, அமெரிக்க அவுஸ்ரேலிய கண்டங்களில் வாழ்வதினால்தான் என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது. அதுமாதிரமல்ல மதுரையில் பூக்கும் மல்லிகைப்பூ 48 மணிநேரதுக்குள் கனடாவில் உள்ள திருமண நிகழ்வுகளில் பெண்களின் கூந்தலை அலங்கரிக்கின்றது. இதனை ஆங்கிலத்தில் Greater International Cultural Influence என அழைக்கப்படுகின்றது. இதனை தமிழில் கூறுவதாயின் சர்வதேசரீதியான கலாசாரத்தின் தாக்கம் எனக் கூறலாம்.

சர்வதேர ரீதியாக மக்கள் நாடுகளுக்கிடையில் பயணங்கள் மேற்கொள்வதும் ஒரு குறிப்பிடக்கூடிய அம்சமாக மாறியுள்ளது. உல்லாசப் பிரயாணத்துறை இன்று எல்லா நாடுகளின் பொருளாதார வளர்ச்சியில் கணிசமாக பங்கினைக் கொண்டிருக்கின்றது. சோசலிச கொள்கைகளை கொண்டுள்ள கியூபா நாடு கூட சர்வதேசமயமாக்கலின் எல்லாப் பகுதியையும் உள்வாங்காமல் விட்டாலும் உல்லாசப் பயணத்துறையை உள்வாங்கியே செயல்படுவதினை நடைமுறையில் காணக்கூடியதாய் உள்ளது.

இதன் இன்னொரு அம்சம் தகவல்கள் பரிமாறப்படுவதன் (Share Information) செயல்பாடு அதிமுக்கியமானதாக கொள்ளப்படுகின்றது. இது கல்வி, பொருளாதாரம், அரசியல் சமுகம் சார்ந்த செயல்பாடுகளை வளர்ச்சியடைந்த நாடுகளில் சாதாரண குடிமகனும் உடனுக்குடன் அறியக்கூடியதாய் உள்ளது.

எனவே இப்படியான ஒரு நாட்டில் வாழும் நாம் எமக்கு தேவையான ஆரோக்கியமான தகவல்களை பெறுவதன் மூலம் எமது வாழ்வையும் எமது சமூகம் சார்ந்த வாழ்வையும் வளம்படுத்துவோம்.



**Jude**
**Anthonypillai LL.B. (Canada)**
Barrister, Solicitor & Notary Public
Former Asst. Crown Attorney

**Phone**
**416 332 8547**

**யூட் அந்தோனிப்பிள்ளை**
கனடிய வழக்கறிஞர்
முன்னாள் அரச வழக்கறிஞர்

**தொலைபேசி**
416 332 8547

**தொலைநகல்**
416 332 8379

2390 Eglinton Ave. East
Suite 259
Scarborough ON
M1K 2P5


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ கணேஷ துர்க்கா தேவஸ்தானம்

**SRI GANESHA DURGA HINDU TEMPLE OF MISSISSAUGA**







தொடர்புகளுக்கு:

'ஸ்ரீ விஜயலெட்சுமி வாசா அதிபர்', 'சிவாகம கிரியா பூஷணம்'

**சிவஸ்ரீ. பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள்**

(ராஜன் குருக்கள்)

கனடிய திருமணப்பதிவு அதிகாரி, இந்துமதகுரு, புங்குடுதீவு - 10ஆம் வட்டாரம்
ஆலயப் பிரதமகுரு, ஆலய ஸ்தாபகர், முதல்வர் - அறங்காவலர் சபை

**7220 Tranmere Drive**
**Mississauga, ON. L5S 1L6**
**TEL: 905-405-0011 / 905-501-0011**

**www. sriganeshadurga.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NLR ACCOUNTING AND TAX SOLUTIONS

Personal Tax Returns
Corporate Tax Returns
Book-keeping
RST, GST, Payroll service

E-File
confidential
friendly and
fast service

Phone
416 888 1128
416 492 7973

Location
2525 Pharmacy Av.
Pharmacy Av & Finch Av. East
(Inside Universal Textiles)

NLR

## சர்க்கரையோடு..

போட்டுத் துடைத்து விடலாம். விரல்களுக்கிடையேயுள்ள பகுதிகளுக்கு போடக்கூடாது. ஈரம் தொற்றைத் துரிதப் படுத்தும்.

நாளாந்தம் சுத்தமான காலுறையும் பாதம் முழுவதும் மூடக்கூடிய நன்கு பொருத்தமான காலணியும் அணிய வேண்டியது அவசியம். முடிந்த அளவு வெள்ளைக் காலுறை அணிவது நல்லது. காயம் ஏதாவது ஏற்பட்டு குருதிக் கசிவு போன்றவை இருந்தால் இலகுவில் கண்டுகொள்ளலாம். குதி உயர்ந்த காலணி, முன்பக்கம் கூர்மையான காலணி, விரல் குதி ஆகிய பகுதிகள் திறந்த செருப்பு போன்ற காலணிகள் அணியக்கூடாது. இறுக்கமோ தளதளப்போ இல்லாமல் சரியாகப் பொருந்தக்கூடிய காலணியைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இறுக்கமான காலுறைகள் தவிர்க்கப்பட வேண்டும். வீட்டுக்குள்ளே கூட வெறுங்காலுடன் நடமாடுவதைத் தவிர்க்க வேண்டும். வீட்டுக்குள்ளே பாவிக்கும் காலணிகளைப் பாவிக்கலாம்.

உட்கார்ந்திருக்கும்போது கால்களை உயர்த்தி வைத்துக்கொள்ளலாம். ஒருநாளில் பலதடவை விரல்கள், பாதம் ஆகியவற்றை நீட்டி மடக்கி அசைத்துக் கொள்வதன் மூலம் கால்களுக்கு குருதி வினியோகத்தைத் துரிதப்படுத்தலாம். அத்துடன் முன்னைய கட்டுரையிற் கூறப்பட்டது போல ஒழுங்கான உடற் பயிற்சி செய்வதன் மூலம் குருதி வினியோகத்தை அதிகரிக்கச் செய்யலாம். பாதங்களுக்கு சூட்டு ஒத்தடம் கொடுப்பது கூடாது. உணரும் தன்மை குறைந்து போன நிலையில் இதனால் சூட்டுக் காயம் ஏற்படும் ஆபத்துண்டு. நீண்ட நேரத்துக்கு கால்களை ஒன்றன்மேலொன்றாக குறுக்காக வைத்துக்கொள்ளக்கூடாது. குருதி வினியோகம் குறைந்து நரம்புகள் மேலும் பாதிப்படையலாம். புகைப்பழக்கம் நிறுத்தப்பட வேண்டியது மிக அவசியம். கால்கள் பாதங்கள் ஆகியவற்றில் வீக்கம், சூடு, சருமம் சிவந்து போதல், வலி, உள்நோக்கி நகம் வளர்தல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனே மருத்துவரை அணுகிச் சிகிச்சை பெறுவது அவசியம். கால்கள் பாதங்கள் போன்றவற்றில் சருமம் கடினமடைந்து காய்கள் போன்ற மாற்றங்கள் (calluses) உண்டாகினால் மருத்துவர் அல்லது கால் பராமரிப்பு நிபுணர் போன்றவர்களை அணுகிச் சிகிச்சை பெறவேண்டும்.

ஆண்டுக்கொரு முறை மருத்துவரை அணுகி உடற் பரிசோதனை செய்து கொள்ளும்போது நாட்பட்ட சிக்கல்களுக்கான அறிகுறிகள் தென்படுகின்றனவா எனப் பரிசோதித்துக் கொள்வதுடன் கால்களையும் பரிசோதித்துக் கொள்வது மிக அவசியம்.

தொடரும் இதழ்களில் பயனுள்ள இன்னும் பல நலவாழ்வுக் கட்டுரைகளைத் தர எண்ணியுள்ளேன்.




"ஆசை, ஆசை இப்பொழுது
பேராசை இப்பொழுது
ஆசை தீரும் காலம் எப்பொழுது?"

வீடு வாங்கும் உங்கள்
ஆசைகளை நிஜங்களாக்கிவிட
இன்றே அழையுங்கள்...

"Honesty, Integrity, Professionalism"

சாள்ஸ் தேவசகாயம் M.A
Sales Representative
Direct: 416-284-5555
24Hrs: 416-284-4751
880 Ellesmere Rd., Suite 203
Scarborough. Ont. M1P 2W6

ROYAL LEPAGE
Connect Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPREATED



Graphic Land - 647. 219. 7576



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• Loans • Mortgages • Insurance Claims • Traffic Tickets •

Scholarship Plan [RESP]

**JRB Universal Inc.**

Almost All Services Available

B: 416 752 7555

C: 416 937 9081



**R.R. Rajkumar**

B.Com (Hons), M.B.A.

Any Referral Service

• Credit Counseling • Accounting & Tax Services •

# ஆலய சன்னிதானங்களில்

## கனடா றிச்மன்ட்ஹில் இந்து ஆலயம்

வடஅமெரிக்காவின் 'பெரிய கோயில்' என அழைக்கப்பெறும் றிச்மன்ட்ஹில் ஆலயம் திங்கட்கிழமையிலிருந்து வியாழக்கிமை வரையும் காலை 8:00 மணி முதல், பகல் 1:30 மணி வரையும், பின்னர் பிற்பகல் 5:30 மணியிலிருந்து இரவு 9:00 மஸி வரையும் திறந்திருக்கும். வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்றும் விடுமுறை தினங்களிலும் காலை எட்டு மணி தொடக்கம் இரவு ஒன்பது மணி வரையும் திறந்திருக்கும். இரவு 9:30 மணிக்கு ஆலயம் மூடப்படும். ஆலய நிகழ்ச்சிகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் 905 883 9109 தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம்.

## மிசிசாகா ஸ்ரீகணேச துர்க்கா ஆலயம்

மிசிசாகா 7220 Trammere Driveல் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஸ்ரீகணேச துர்க்கா இந்து ஆலயத்தில் தினசரி மூன்று காலப் பூஜைகளும் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. செவ்வாய்க்கிழமைகளிலும் வெள்ளி முதல் ஞாயிற்றுக்கிழமைகளிலும் சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன. கிரியா வழிபாடுகளாலும், திருமணச் சடங்குகளாலும் வடஅமெரிக்கா முழுவதும் நன்கு பிரபல்யமான சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள் (ராஜன் ஐயா) அவர்களே இந்த ஆலயத்தை நிறுவியுள்ளார். இதன் பிரதம குருக்களும், அறங்காவல் சபையின் முதல்வரும் இவரே. ஆலய தொலைபேசி இலக்கம் 905 405 0011. ஸ்ரீவிஜயலட்சுமி வாசாவின் தொலைபேசி இலக்கம் 905 501 0011.

## ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம்

ஸ்காபரோ கென்னடி வீதியில் 3025ம் இலக்கக் கட்டிடத்தில் யுனிட் இலக்கம் 10 இல் (பிஞ்ச் வீதிக்கும் மக்னிக்கல் வீதிக்கும் இடையில், சன் பிளவர் பேணிச்சர் நிறுவனத்துக்கு முன்னால்) ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. ஆலயத்தில் தினசரிப் பூஜைகளுடன், முக்கிய தினங்களில் விசேட வழிபாடுகளும் இடம்பெறுகின்றன. வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில் இரவுப் பூஜையின் பின்னர் சுவாமி உள்வீதி வலம் வருதல் இடம்பெறுகின்றது. ஆலயத்தின் வழமையான மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகள் உட்பட்ட மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் 416 291 8500 இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

நான் ஒரு வழக்கறிஞர் இல்லை

*Motor Vehicle Accident*

*Criminal*

வாகன விபத்து!

கிறிமினல்!

உங்கள் கணிப்பு தவறாகலாம்..

உரிய



சட்ட ஆலோசனைகளுக்கு

கலகலப்பு தீசன்

416-803-5296

WWW.KALAKALAPPU.NET



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரோக்கியத்திற்கு சமைக்காத உணவு

பச்சைக் காய்கறிகள் மிக அதிகளவான சத்துக்களை வழங்குவதுடன், அவை சமிபாடடையத் தேவையான நொதியங்களையும் தாமே கொண்டிருக்கின்றன. சமையல் முறைகள் அந்த இயற்கை நொதியங்களை அழித்துவிடுகின்றன. இதனால் பன்கிரியாஸ் அதிகளவில் உள்ளக சமிபாட்டு நொதியங்களைச் சுரக்கத் தூண்டப்படுகின்றது. நாளொன்றில் ஒரு நேரமாவது சமைக்காத உணவு வகைகளை உட்கொள்ளல் நலம். அல்லது ஒரு நாளில் இரண்டு தடவையாவது சமைக்கப்பட்ட உணவுடன் சலாட் சாப்பிடுதல் வேண்டும்.

## புதிய கல்விக் குறியீடு

வெளிநாட்டு மாணவரைக் கவர்வதற்காகவும், அவர்களைத் தொடர்ந்து தக்க வைப்பதற்காகவும், கனடிய மாகாண கல்வி அமைச்சர்கள் ஒன்றுகூடி, கல்விக்கென கனடாவுக்கான பொதுவான ஒரு குறியீட்டை வெளியிட்டுள்ளனர். வெளிநாடுகளில் உள்ள மாணவர்கள், கனடிய மாகாணங்களின் பெயரை வைத்து கல்வியைப் பெறுவதற்கு விண்ணப்பிப்பதிலும் பார்க்க, கனடிய கல்வித் தகைமை என்ற பொதுப் பெயரால் விண்ணப்பிப்பது பொருத்தமானதென தீர்மானித்துள்ளனர்.
புதிய வடிவமானது சிவப்பு மேபிள் இலையுடன், "Imagine Education in Canada" என்னும் வாசகத்தை ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய இரு மொழிகளிலும் கொண்டிருக்கும்.

## தாய்ப்பால் மகிமை

குறை மாதக் குழந்தைகள் பிறந்தவுடன், ஆஸ்பத்திரிகளில் தீவிர கண்காணிப்புப் பிரிவில் வைக்கப்பட்டிருப்பார்கள். அக் குழந்தைகளுக்கு தாய்ப் பால் ஊட்டுவதை அண்மைய ஆராய்ச்சிகள் ஊக்குவிக்கின்றன. தாய்ப் பால் அருந்துவதனால் அவர்களுடைய மனவளர்ச்சி ஊக்குவிக்கப்படுகின்றது எனத் தெரிய வந்துள்ளது.

# உயிர் வாழ்வெனும் மலர்

### மகராஜி

நீங்கள் ஒரு அழகிய புற்தரையையும், மரங்களையும், மலர்களையும் கொண்ட ஒரு பூந்தோட்டத்தில் இருப்பதாகக் கற்பனை செய்யுங்கள். நீங்கள் அங்கே இருக்கும் பொழுது திடீர் என எங்கிருந்தோ ஒரு சிறிய பையன் உங்களிடம் வருகின்றான். அவன் புன்னகையுடன் சிரித்துக் கொண்டே உங்களிடம் ஒரு மலரைத் தருகின்றான். அப்போது நீங்கள் என்ன செய்வீர்கள்? என, சிறுவயதிலேயே நம்முள்ளே நிறைவிற்கான அனுபவத்தைக் கண்டு கொள்வது பற்றிப் பேச ஆரம்பித்த மகராஜி கேட்கின்றார்.

அந்தச் சிறுவன் சிலருக்கு அந்த மலர்களை வழங்கியபோது அவர்களின் முதற் கேள்வி உன்னுடைய பெற்றோர்கள் எங்கே? நீ வழி தவற விட்டுவிட்டாயா? என்பதாகத்தான் இருக்கும் என அவர் கூறுகின்றார். அவன் இன்னுமொரு கூட்டத்தினரிடம் சென்ற பொழுது 'ஓ அது எனக்கா? என ஒருவர் கேட்கின்றார், இன்னுமொருவர் ஆகா எவ்வளவு நல்ல அழகான மலர்கள் என்பதுடன் நிறுத்திக் கொள்கின்றார்.

"அந்தத் தோட்டத்தில் யார் இருக்க வேண்டும் என நான் விரும்புகின்றேன் என்பதைக் கூறுகின்றேன் என்கிறார் மகராஜி. கள்ளங் கபடமற்ற சிரிப்புடனும் புன்னகையுடனும் அச்சிறுவன் அந்த மலர்களை எனக்குத் தருகின்றான். நானும் அதேமாதிரியான சிரிப்புடனும், அதே மாதிரியான கள்ளங் கபடமற்ற புன்னகையுடனும், எனது கரங்களை நீட்டி அதை ஏற்றுக் கொள்ள விரும்புகின்றேன். வார்த்தைகள் எதுவும் பரிமாறப்படவில்லை.

எளிமையான நிலையில், நான் ஒவ்வொரு மூச்சையும் ஏற்றுக் கொள்வதைப் போல் அந்த மலரையும் ஏற்றுக் கொள்ள விரும்புகின்றேன். எனக்குத் தரப்படும் ஒவ்வொரு பரிசையும் நான் ஏற்றுக் கொள்ள விரும்புகின்றேன்.

தனது பதின்மூன்றாவது வயதில் இருந்து சர்வதேச ரீதியில் பிரயாணம் செய்து உலகெங்கும் உள்ள பத்து மில்லியன்களுக்கும் மேற்பட்ட மக்களுக்கு மகராஜி உரையாற்றியுள்ளார். பிரேம் றாவத் நிறுவனத்தின் ஊடாக அவரின் செய்தியை பல்வேறு ஊடகங்களில் 70க்கும் மேற்பட்ட மொழிகளில் 97க்கும் மேற்பட்ட நாடுகளில் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவுள்ளது. அவருடைய செய்தி அன்று, அவர் தனது பதின்மூன்றாவது வயதில், தனது தாய்நாடான இந்தியாவில், முதன் முறையாக, பார்வையாளர்களிடம் அவர்களின் வாழ்வில் தனிநபர் நிறைவிற்கு முன்னுரிமை கொடுக்கும்படி வலியுறுத்தியது போலவே இன்றும் மாறாதுள்ளது.

எம்மால் வெளியுலகில் நிறைவடைய முடியுமோ முடியாதோ என எனக்குத் தெரியாது. ஆனால் உள்ளத்தின் உலகில் நிச்சயமாக எம்மால் நிறைவடைய முடியும் என மகராஜி கூறுகின்றார். ஒவ்வொரு கணமும், இந்த அற்புதமான சக்தியானது, கள்ளங்கபடமற்ற நிலையில், ஆனந்தத்துடன், புன்னகையுடன் அந்தச் சுவாசம் என்னும் மலரை எனக்குத் தருகின்றது.

என்னுள் ஒவ்வொரு மூச்சுடனும் வரும் அந்த சிறிய சிறுவனின் சிரிப்பை, இந்த வாழ்வென்னும் அற்புதமான பரிசை, இந்த சுவாசமென்னும், உள்ளுணர்வென்னும், அத்துடன் விளக்கம் எனும் பரிசை, மலர்ந்து கொண்டே இருக்கும் இந்த உயிர் வாழ்வு என்னும் பரிசை நான் காவிச் செல்ல வேண்டியுள்ளது.

என்னைப் பொறுத்தவரை எனக்குத் தரப்பட்டிருக்கும் இந்த அற்புதமான பரிசைப் போற்றுவதற்கு என்னிடம் எளிமையும் அந்தச் சிறுவனின் புன்னகையும் இருக்க வேண்டும்.

நிறைவடைவதற்கு மக்களுக்குத் தேவையான சகல விடயங்களும் ஏற்கனவே உள்ளத்தின் உள்ளே காத்துக் கிடப்பதாக மகராஜி உறுத்திக் கூறுவதுடன் அதைக் கண்டு கொள்வதற்கான உதவியை தான் வழங்குவதாகவும் கூறுகின்றார்.

நாம் ஏற்கனவே அந்தப் பூங்காவில் இருக்கின்றோம். அந்த மலர் எமக்கு நீட்டப்பட்டுள்ளது. இப்பொழுது எஞ்சியிருக்கும் ஒரே விடயம் இந்த உயிர்வாழ்வின் அற்புதமான வட்டத்தைப் பூர்த்தி செய்வதற்காக அதை ஏற்றுக் கொள்வதுதான் என அவர் கூறுகின்றார்.

மகராஜியையும் அவர் வழங்கும் ஞானவழிமுறை பற்றி மேலும் அறிந்து கொள்வதற்கு 416 431 5000 எனும் தொலைபேசி எண்ணை அழைத்து, உங்களது பெயர் மற்றும் தொலைபேசி எண் போன்ற விபரங்களைப் பதிவு செய்யவும். கூடிய விரைவி ல் தபாலில் உங்களுக்கு இலவசமாக டிவிடி அனுப்பி வைக்கப்படும்.

தமிழ்: 416 - 431 5000 ஆங்கிலம்: 1 877 707 3223

wordsofpeace@sympatico.ca
www.wordsofpeace.ca
www.wordsofpeacetamil.com
www.tprf.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**The Children's Education Trust of Canada**
**offered to the public by**

**Children's Education Funds Inc.**



10 டாலரிலிருந்து ஆரம்பித்து
7200 டாலர்கள் வரை
கனடா அரசாங்கம் வழங்கும்
நன்கொடையைப் பெற்று
(20 வீத Grant)
உங்கள் பிள்ளைகளதும்
பேரப்பிள்ளைகளதும்
கல்வி வாய்ப்பை
ஊக்குவியுங்கள்.

சமூக நம்பிக்கையையும்
நன்மதிப்பையும் பெற்ற
சிவா
கணபதிப்பிள்ளை
அவர்களை அழைத்து
விபரங்களைப் பெறுக!

Siva Kanapathypillai
Branch Manager
416 438 0660, 416 438 3578
416 899 6044
இல்லத் தொலைபேசி:
905 472 1139
email
s.kanapathypillai@cefi.ca

# சளித்தொல்லையா? ஒழியுங்கள் கரப்பொத்தான் பூச்சியை!

நீண்ட நாட்களுக்கு பின்னர் அந்தப் பையன் வைத்தியசாலைக்கு வந்திருந்தான். சந்தோஷமாக இருந்தது. மீண்டும் என்னிடம் வைத்தியத்திற்கு வந்துள்ளான் என்பதால் அல்ல. கடந்த ஆறு மாதங்களாக அவன் என்னைப் பார்க்க வேண்டிய தேவை ஏற்படாதிருந்ததே என்ற மன ஆறுதல்.

ஆறு மாதங்களாகத் தான் அவன் வருத்தம் என்று என்னிடம் வரவில்லை. ஆனால், அதற்கு முந்தைய பத்து மாதங்களில் முப்பது தடவைகள் பார்க்க நேர்ந்தது. கணினியில் உள்ள அவனது கோப்பைப் பார்த்தபோது இது தெரிய வந்தது. எவ்வளவு துன்பம் அவனுக்கு அந்த வேளைகளில்.

ஒரே சளி வருத்தம்' தும்மல், மூக்கடைப்பு, அரிப்பு, மூக்கால் ஓடுதல், கண்கடி, தலையிடி, தலைப்பாரம், சோம்பல், தூக்கக் குணம், இருமல், இளைப்பு, ஆஸ்மா சொல்லி மாளாது. பாடசாலை செல்லத் தொடங்கி சில மாதங்கள்தான். ஆனால், ஒழுங்காகப் பாடசாலை செல்ல முடியாது, படிக்க முடியாது. இதனால் பெற்றோர்களினதும் ஆசிரியர்களினதும் தூற்றலுக்கு ஆளாக நேர்ந்தது.

அத்தோடு குளிக்காதே, தண்ணி அளையாதே, குளிர்பானம் அருந்தாதே, பழங்கள் சாப்பிடாதே என்ற பெற்றோர்களின் கட்டுப்பாடுகள். மருந்துக்கு மேல் மருந்துகளும் சேர்ந்து கொள்ளவே மகிழ்ச்சியைத் தொலைத்து மந்தமானவனாக மாறியிருந்தான். விழுந்ததால் காலில் ஏற்பட்ட உரசல் காயத்திற்காக வந்திருந்தான். சளித்தொல்லைக்காக அல்ல. காயம் பட்டபோதும் இளமையின் உற்சாகம் முகத்தில் பளிச்சிட்டது.

"எப்படி மறைந்தது சளித் தொல்லை' பெற்றோர்களிடம் வினவினேன்.
"வீடு மாறினோம். அதிலிருந்து இவனுக்கு சளிபிடிப்பதில்லை' என்றார்கள்.
ஆச்சரியமாக இருக்கிறதா? வீடு மாறினால் சளி பிடிக்காதா'

காரணம் இதுதான். முன்பு அவர்கள் குடியிருந்த வீட்டிற்குப் பின்புறமாக தெருவோரக் கழிவுக் கால்வாய் ஓடிக்கொண்டிருந்தது. இரவானதும் இவர்கள் வீடெங்கும் அங்கிருந்து படையெடுந்து வரும் கரப்பொத்தான் பூச்சியின் இராச்சியம் தான். இப்பொழுது குடியிருப்பது தொடர்மாடி வீட்டில். அதுவும் 5 ஆம் மாடியில் அங்கு கரப்பொத்தான் அதிகமில்லை. அதனால் இங்கு கரப்பொத்தான் அதிகமில்லை. அதனால் இங்கு அப்பூச்சியின் எச்சங்கள் இருப்பதில்லை. எனவே சளித்தொல்லை நீங்கிவிட்டது.

சரி' சளிக்கும் கரப்பொத்தானுக்கும் என்ன தொடர்பு என்கிறீர்களா?
சளி, ஆஸ்மா ஆகியவற்றைத் தூண்டுபவையாக பல பொருட்கள் ஆய்வு ரீதியாக இனங்காணப்பட்டுள்ளன. பூக்களின் மகரந்தம், நாய், பூனை போன்ற வளர்ப்புப் பிராணிகளின் ரோமம், தூசி, தூசிப்பூச்சி, கரப்பொத்தான் எச்சம் எனப் பலவாகும்.

இது உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆயினும் இலங்கையைப் பொறுத்தவரையில் வீட்டுத் தூசிப்பூச்சி, களஞ்சியத் தூசிப்பூச்சி, கரப்பொத்தன் ஆகிய மூன்றுமே ஆஸ்மாவைத் தூண்டுவதற்கு முக்கிய காரணமாகும். இதனை பேராசிரியர் அனுரா வீரசிங்க தலைமையில் செய்யப்பட்ட ஒரு ஆய்வு தெளிவாகக் குறிப்பிடுகிறது. எமது சூழலில் ஆஸ்மாவுக்கு பூக்களின் மகரந்தம், வளர்ப்புப் பிராணிகளின் ரோமம் ஆகியவை முக்கியமான காரணிகள் அல்லவாம்.

எமது படுக்கை விரிப்பு, தலையணை, மெத்தை போன்றவற்றில் மிக நுண்ணிய கிருமி (Dust mite) சேர்ந்து விடுவதுண்டு. அவற்றை நீரில் துவைத்து சுத்தப்படுத்துவதால் அக்கிருமியை ஒழித்து விடமுடியாது. அவற்றை வெயிலில் காயவைக்க வேண்டும் அல்லது இஸ்திரிக்கை போட வேண்டும்.

எமது உடைகள் மற்றும் புத்தகங்கள் போன்றவற்றைக் களஞ்சியப்படுத்தும் இடத்தில் களஞ்சியப்பூச்சி (Storage Mite) உற்பத்தியாகும். இவை இரண்டுமே ஆஸ்மாவைத் தூண்டும் ஏனைய காரணிகளாகும். நீங்கள் சளி, ஆஸ்மா போன்றவை உள்ளவராயின், வீட்டுத் தூசிப்பூச்சி, களஞ்சியதூசிப்பூச்சி, கரப்பொத்தான் ஆகியவற்றோடு தொடர்புறுவதைத் தவிர்க்க வேண்டும்.

ஆயினும் கரப்பொத்தான் பூச்சியிலிருந்து தப்புவது சற்று சிரமமான காரியம்தான். இறைவனைப் போல எங்கும் நிறைந்தவனாக எல்லாம் வல்லவராக இருக்கிறார். டைனோசர் போன்ற பாரிய உயிரினங்கள் பலவும் சூழல் மாற்றங்களுக்கு இசைவடைய முடியாது மறைந்தொழிந்து போக கரப்பொத்தான் பூச்சியோ இன்றும் தாக்குப் பிடித்து நிற்கிறது.

உலகத்திலிருந்து ஒழிக்க முடியாவிட்டால் போகிறது. உங்கள் வீட்டிலிருந்தாவது ஒழியுங்களேன். வீடு மாறினாலும் நீங்கள் கவனயீனமாக இருந்தால் புதிய இடத்திலும் வந்து சேரக் கூடிய தீரன் அது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DR. ILLANGO & ASSOCIATES
*Dental Office*

BRACE FOR A GREAT SMILE

DR. ILLANGO & ASSOCIATES

பல் சிகிச்சையில் சகல துறைகளிலும்
எமது சேவை

**DR. M. ILLANGO**
B.D.S. Dip.Orth (Oslo).General Practioner Mainly Orthodontics
கிளிப் போடும் வேலை


**DR. MEHRAN MOJGANI**
D.D.S. Dip. Perio.Gum Specialist
பல்முரசு வைத்திய நிபுணர்

**DR. SABAPATHY RAVEENDRAN**
B.D.S,M.S,F.D.SR.C.S (Eng). General Practioner (Mainly Oral Surgery)
(அறுவைச் சிகிச்சையில் இலங்கையிலும் இங்கிலாந்திலும் நிபுணத்துவம் பெற்ற பல்வைத்தியர்)


**DR. ALI ADIPBFAR**
D.D.S.M.D.F.R.C.D (C). Plastic Surgeon
(Wisdom tooth extraction under sedation)
மயக்கமாக்கி ஞானப்பற்கள் அகற்றுபவர்

**DR. JANAKI ILLANGO**
B.D.S. குடும்ப பல் வைத்தியர்

**Dr. LAI YUNG CHEONG**
B.D.S. குடும்ப பல் வைத்தியர்




**SCARBOROUGH OFFICE**
3852 Finch Ave. East, Units 204, 303
Scarborough, ON
**(416) 292-7004**




**MISSISSAUGA OFFICE**
3025 Hurontario St., # 102
Mississauga, ON
**(905) 270-7844**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585


ஓம்

# ஸ்ரீகௌரி மங்கள சேவை



அனைத்து இந்து மத கிரியைகளுக்கும்
கனடிய திருமண பதிவு அதிகாரி, இந்து மதகுரு

## சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்

(ஐயாமணி) புங்குடுதீவு-10
ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய பிரதம குரு

திருமணம், திருமணப் பதிவு
புதுமனை புகுதல்
கடை திறப்பு வைபவம்
புண்யாக வாசனம்
பூப்புனித நீராட்டு விழா
பூமாலை, ஆண்டாள் மாலை
சடை நாகம்
தலை நகை முழுவதும்
முத்து மணவறை

தலைப்பாகை
பந்தல் அலங்காரம்
கல்யாண பூசைப் பொருட்கள்
முத்துச் சப்பரம்
ஆலயத் திருவிழா
ஆலய வைபவங்கள்
ஆகிய அனைத்துக்கும்
எப்போதும் எம்முடன்
தொடர்பு கொள்ளுங்கள்


**416-266-3333**

628 E Birchmount Road
Scarborough, Ontario. M1K 1P9

ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய தொலைபேசி இலக்கம் 416-291-8500

# NKS Draperies & Blinds

**210 Silver Star Road, Unit. 825**
**(Midland & Finch) Scarborough, ON**
**416 321 6420**





- **Vertical blinds**
- **Venetian blinds**
- **Draperies**
- **Curtains**
- **Shutters**

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
கேதா

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org